தனிப்பிரதி விலை { உள் நாடு 1½ அணா / வெளிநாடு 1½ அணா

KUDI ARASU.

Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

| மாலை 4 | ஈரோடு, விபவ ௵ மாசி௴ 20௳ (3—3—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 45. |
|---|---|---|



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## வேதப்புரட்டை வெளியாக்கும் "ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு.

வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு


**தபால்சார்ஜ் இனம்.**

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.



குளிர்! குளிர்!! குளிர்!!!

## பால் க்லவா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,



## ஜீவரசம்! ஜீவரசம்!!

### சகல நோய்களுக்கும் தேவாமிர்தம் போன்றது

ஒரு பாட்டில் ஜீவரசம் உங்களிடமிருந்தால் வியாதிகளைப்பற்றிய கவலை வேண்டாம். இது ஓர் சிறந்த குடும்ப ஒளஷதமென பல பெரியோர்களால் நற்சாக்ஷி பெற்றது. உண்மையறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள், பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0

முக்கிய வியாபாரிகள்:— லக்ஷிமி ஸ்டோர், ஈப்போ, F. M. S.
T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், மதுரை.
M. இஸ்மாயில் சாஹிப் அய்யன்கடை, தஞ்சாவூர்.

ஜீவரசம் கம்பெனி லிமிடெட்,
(2) காரைக்குடி S. I.



## திருப்பூர் பனியன்ஸ் & ஜவுளிகள்.

பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் மெல்லியதாயும் அதிக நாள் உழைக்கக்கூடியதுமான ஜவுளிகளும் பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

வெளியூர் ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும்.

அட்வான்சு இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

தி ஜெனரல் நிட்டிங் பாக்டரி,
திருப்பூர். (தென்னிந்தியா)



**மதனகாமேஸ்வர லேகியம் (Regd)**

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 3 அணா. காலண்டரும் கேட்லாக் இனம்.

சித்த ஒளஷதசாலை கம்பெனி, K. A. S.
போளூர் முக்லச்சேரி, தென்மலையாளம்.



## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதப்பத்திரிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46-பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனம்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட

உள்நாடு களுக்கு ரூ. 1—0—0
வெளிநாடு களுக்கு ரூ. 1—4—0

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்தி லுதவும் சஞ்சீவியாயும், எல்லாரா லும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தா யுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெற லாம்.

புட்டி1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச் சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதி யையும் போக்கி அன்றாடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமய மாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.


இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோ சனை சேர்த்து செய்யப்பட்டது, உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியை யும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சாப்பிடும் முறை மருந்துடன் அனுப்பப்படும்.

**தண்டபாணி வைத்தியசாலை,**
292, சைனாபஜார், மதராஸ்

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும், வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெ ரிக்கன் ஸ்ட்ராப்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப் படும். உத்தரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜீனென் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாடு.

மேற்படி மகாநாட்டின் நடவடிக்கைகளைத் திரட்டிப் புஸ்தக ரூபமாக வெளி யிடப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் ஐஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக்கட் சி ஆகிய பெரிய தலைவர்களின் ஆப்டோன் படங்களையும் அவர்களுடைய பிறப்பு வளர்ப்பு சரித்திரத்தையும் காணலாம். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமியின் படம் புஸ்தகத்தின் பேரில் வெகு அழகாக அமைந்திருக்கிறது. மகாநாட்டிற்கு சேரிவ வசதிப்படாதவர்கள் இந்தப் புஸ்தகத்தினை ஒவ்வொருவரும் அவசியம் வாங்கி வைத்துக்கொள்ளவேண்டியது, சொற்ப காபிகளே கைவசம், உடனே எழுதுங் கள். விலை அணா 2.

ஒரே காலத்தில் 6 காபிகள் வாங்கினால் அணா 10 க்கு வி. பி. யில் அனுப்பப் படும், தனிப்பிரதி வேண்டுவோர் இரண்டணா அஞ்சல் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர், தபால்பெட்டி 119, மதராஸ்.

## ஆனந்த விகடன்


64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிக ளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக் கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங் கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்செலவுள்பட இந்தியா, பர்மா, இலங்கை களுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311.
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங் குவோர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண் டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியா ரம் விலை ரூ. 5-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீனென் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## அரை நூற்றாண்டில் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம்.

(1916 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் பண்ணவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தவர்களுக்கு [illegible] லைசென்ஸ் வாங்கிக்கொடுக் கப்படும். மற்ற விபரத்திற்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மதராஸ் [illegible] மோட்டார்,
[illegible]
மைலாப்பூர், மதராஸ்.

## பெண்கள் [illegible]

(விலை ரூபாய் ஒன்று).

[illegible] தந்திரங்கள் அடங்கியி ருக்கின்றன. [illegible] தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. [illegible] நிரம்பப் பெற்றிருக்கிறது.

தேவி ஆஸ்ரமம்.
[illegible] கோவில் வீதி,
புதுச்சேரி.

சுயமரியாதை பெறவேண்டுமானால் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளை வாங்கிவாசியுங்கள்

# நாட்டு வைத்தியம்.

(கைவல்யம் எழுதுவது)

செங்கல்பட்டு மகாநாட்டில் சித்தவைத்தியத்தை ஆமோதிக்க எனக்குக் கட்டளையிடப்பட்டது. விஷயமோ விரிந்தது. அங்கெல்லாம் புத்தியும் விரிந்துவிட்டது. விரிந்துபோன புத்தியைச் சுருக்கி உங்களுக்கு விபரமாகச் சொல்ல என் மனதிற்குத் தெரியவுமில்லை, முக்கியமானதை எடுத்துச் சீர் கூட்டித் தொகுத்துச் சொல்லவோ நேரமுமில்லை. உதிக்கும் சங்கல்ப எண்ணத்தின் ரூபங்களை ஒன்றுவிடாமல் அடுக்காக வெளிப்படுத்துவதற்கு வாய்க்கு வேகமுமில்லை. இந்நிலைமையில் என் வார்த்தை முடிந்தாலும் என்னுடைய மூன்றும்பக்கம் நாட்டு வைத்தியத்திலுள்ள உண்மை அனுபோகங்களையும் அவை நம்மைவிட்டு மறைவதால் உண்டாகும் கஷ்டங்களையும் விபரமாக எடுத்துச் சொல்லும். நீங்கள் அவைகளைக் கவனித்து உங்கள் நிச்சயபுத்தியால் தெரிந்தீர்களானால் நாட்டுக்கும் நமக்கும் நன்மையுண்டு.

வைத்தியத்தைப்பற்றி நான் படித்ததும் கேட்டதுமுக்க அனுபோகத்தைப்பற்றியும் சிறிது தெரியும். சில இங்கலீஷ்தமிழ வைத்தியர்களுக்கு நாட்டு வைத்தியத்திலுள்ள மருந்துகளும் சொல்லியிருக்கிறேன். இங்கிலீஷ் வைத்திய உயர்தரப்பரீட்சை கொடுத்து இங்கிலீஷ்படிப்பின் ஆராய்ச்சிக் கிரமத்தோடு பலரிடம் நாட்டுமருந்துகளைத் தெரிந்து நாட்டு வைத்தியமருந்தால் பெரும் லாபமும் பெரும் வியாதிகளைத் தீர்க்கும் அபூர்வ புத்தியையும் உடையவராக டாக்டர் நஞ்சுண்டராவ் யவரிடம் சென்னையில் விளங்கினார். நாட்டு வைத்தியர்களும் வைத்தியம் தெரிந்த சந்நியாசிகளும் அவரைக்கண்டும் அவர் வீட்டில் சிலநாளிருந்தும் அவரால் உதவிபெற்றும் போவார்கள். அந்த வைத்திய கோஷ்டியுடன் பலநாளிருந்திருக்கிறேன். அவர் நாட்டுவைத்தியத்தை முன்னுக்குக் கொண்டு வருவதற்குப் பிரயத்தினம் செய்து கொண்டிருந்தார். டாக்டர் கோமன் கமிட்டி ரிபோர்ட் வருவதற்குமுன் அவர் இறந்துபோனார். எக்லெக்டிக் பார்மஸியென்று ஒரு மருந்துஷாப்பும் ஏற்படுத்தினார். எதுமூலமாகவும் யார்மூலமாகவும் வியாதியைக் குணப்படுத்துவது எதுவோ அதற்குப்பெயர் எக்லெக்டிக் பார்மஸி.

அஷ்டாங்க ஹிருதயம் என்னும் ஆயுர்வேதமும் சிந்தாமணியென்னும் சித்த வைத்தியமும் யூனானி என்றும் டிபபி ஆக்ஸர் என்றும் சொல்லப்படும் யூனானி வைத்தியமும், ஹோமியோபதி, ஐசோபதி, மக்ஸோபதி, பயோகெமிக் என்னும் மேனாட்டு வைத்தியப்பிரிவுகளும், இப்பொழுது நடைமுறையிலுள்ள அலோபதி என்னும் இங்கிலீஷ் வைத்தியமும் நாட்டு வைத்தியமென்று சொல்லப்பட்ட நாட்டு வைத்தியத்தின் தத்துவத்திற்கே வந்துகாண்கின்றன. இதைப்பற்றி அநேக வெளிநாட்டு ஆலபதி டாக்டர்களுக்குத் தெரியாது. இவர்கள் பள்ளிக்கூடப்படிப்போடு நின்றுவிட்டவர்கள். இவர்கள் பணம்சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆசையும் தன்னை நினைத்துக்கொள்ளும் பெருமையும் சோம்பேறித்தனமும் நமது ஜனங்களின் அறியாமையும் படிப்பிற்குத் தடையாக இருக்கிறது. ஜனங்களுக்கு நான் வைத்தியம் மாறும் தன்மைகளைப்பற்றித் தெரிய ஆசைகொள்ளுவதில்லை; புதுப்புது மருந்துகள் இவர்களுக்குள்ள தெரிந்தாலும் அப்பொழுது கண்டுபிடிக்கப்படும் வைத்தியத்தின் தத்துவத்தை இவர்கள் படிக்கவேண்டும். பணக்காரரைத் திருப்திபண்ணவோ, பணம்சம்பாதிக்கவோ வைத்தியப்பொறுப்பை அதிகாரத்தால் காட்டலாம். வியாதியஸ்தனின் உயிரைக்காப்பாற்றும் வைத்தியப்பொறுப்பு அறிவிலும் கடமையிலுமே இருக்கிறது. மேனாட்டில் வைத்தியஆராய்ச்சிசெய்தும் பலஉண்மைகளைக் கண்டுபிடித்தும் வரும் டாக்டர்கள் வைத்தியப் பத்திரிகைகளில் எழுதும் அனுபோகங்களையும் அவைப்படித்து நம் நாட்டில் பெரிய இங்கிலீஷ் வைத்தியரென பெயர்பெற்றவர்கள் செய்யும் வைத்தியத்தையும், அவர்கள் அவர்கள்சொல்லும் பத்தியத்தையும் அறிந்தவர்களுக்கு நமது நாட்டு வைத்தியத்தின் தத்துவத்திற்கு ஆங்கிலவைத்தியம வந்துகொண்டிருப்பது விளங்கும். திருஷ்டாந்தமாக நான் எழுதும் வியாசத்திலேயே அநேகம் காட்டப்படும். அதில் முதலில் ஒன்றைச்சொல்லுகிறேன். இப்பொழுது சென்னையில் இங்கிலீஷ் வைத்தியத்தில் உயர்ந்த வைத்தியராக மதிக்கப்படும் டாக்டர் மல்காமன்சனிடம் அநேகர்போகிறார்கள். அவரிடம்போகும் நோயாளிகளுக்கு அவர் 'ஆகாரத்தை நன்றாகமென்று தின்னவேண்டும்' என்று பத்தியம் சொல்லுகிறார், "நொறுங்கத்தின்றால் நோவில்லை" என்று சொல்லுவது நமது நாட்டுப் பழங்கதையல்லவா? இதனால் நமது நாட்டு வைத்தியத்தின் அடிப்படையான தத்துவம் ஜனங்களிடம் பரவியிருந்த தன்மை விளங்குகிறதல்லவா?

நமதுநாட்டில் வைத்தியத்தைப்பற்றி எழுதின புஸ்தகங்களோ அனந்தம், கடல்கொண்டதுபோக நமக்கு அர்த்தமாகாமல் பலர்பலவாறு அர்த்தம் செய்த சித்தர் நூல்கள் எத்தனையோ! தனிப்பட்ட நபர்களுக்கும் சந்நியாசிகளுக்கும் அனுபோகமாகத்தெரிந்து அவர்களோடு ஒழிந்துபோன மருந்துகளோ அனந்தம்! இன்றும் தனிப்பட்ட நபர்களுக்குத்தெரிந்து அவர்கள் உலகத்திற்குச்சொல்லாத மருந்துகளும் அநேகமிருக்கின்றன. நமது ஜீவனத்திற்கு அவசியமான தானியப்பயிர்களும் பல செடி கொடியின் காய்கறிப் பயிர்களும் பல நூற்றாண்டுகளாக நடந்து விளைவித்த பயன்கள் போலவே நாட்டு வைத்தியமும் பல நூற்றாண்டில் கண்டெடுத்த அனுபோகங்கள் எத்தனையோ! மனிதனுடைய எண்ணங்கள் ரூபப்பட்டு நிறைவடைந்த நான்முகற்கொண்டு ஆன்றவரையிலும் பொன்செய்ய வேண்டுமென்கிற ஆசையும் தேகம் அழியாமல் வாலிபத்தோடிருக்கவேண்டுமென்கிற ஆசையும் இருந்துவருவதால் அதற்காகப்பாடுபட்டபலன்களெல்லாம் வைத்திய புஸ்தகங்களாகி வைத்தியத்திற்கும் உபயோகப்பட்டமருந்துகள் எத்தனையோ! இதை அனுசரித்து வைத்தியம் சொல்லவந்தசிலர் "வாதிமகன் வைத்தியனே சொல்லக்கேளாய்" என்றே தங்கள் நூலை ஆரம்பிக்கிறார்கள். நம்கண்ணில்படும் எச்சச்செடியைப் பிடுங்கிவந்தாலும் அதன் குணத்தையும், அது இன்ன வியாதிக்கு உபயோகப்படுமென்றும் கஷாயமாகவோ அரைத்துப்பத்துப்போடவோ சாப்பிடவோ ஏற்பட்ட பக்குவத்தையும் சாதாரண மனிதர்களே சொல்லுகிறார்கள். சேதனாசேதனங்களைச்சார்ந்த செயலற்ற தன்மைகளைக் குணங்களென்றும் திரவியங்களின் ஸம்யோக வியோகங்களால் காணப்படும் வேறுபாடுகளை செயல்களென்றும் கூறும் சாஸ்திரங்களும் சாரசங்கிரகங்கண்டும் இவர்கள் கேட்டதில்லை. சேதனாசேதனத்திரவியங்களில் அதிகரித்துள்ள பஞ்சபூதத்தின் அம்சத்தைக்கொண்டு மருந்துகளுக்குபயோகப்படுகின்ற அந்தப் பஞ்சபூதத்திரவியங்களை ஜாங்கலம், ஔத்பிதம், பார்த்திவம், என மூன்றாகவகுத்து இவைகள் நமது சொரூபங்களாலும் தாக்குள் அடங்கிக்கொண்டிருக்கும் ரஸம், குணம், வீரியம், விபாகம், பிரபாவம் முதலியவைகளாலும் தனித்தனியாய்ச்சில நன்மைதீமைகளைச்செய்யும் திறமுடையவைகளாகின்றன என்னும் பதார்த்த ஆராய்ச்சிகளும் இவர்களுக்குத்தெரியாது. தழை, வேர், பட்டை, புல், பூண்டு, இவைகளைக்கொண்டே நம்நாட்டு வியாதிகளைப்போக்கிக்கொண்டிருந்தார்கள். அதுவே வீட்டுவைத்தியமாகவுமிருந்தது. இப்பொழுதும் கிராமங்களில் இம்மருந்துகளினாலேயே தாங்களாகவே வைத்தியம்செய்து கொள்ளுகிறார்கள். குழந்தைகள் வைத்தியத்திற்கு வேண்டிய மாத்திரைகுளிகைகள், சூரணங்கள் அன்னு, சளி, கணை முதலியவியாதிகளுக்குவேண்டிய எண்ணெய்கள் முதலியவைகளை எல்லாம் தாங்களே செய்துகொள்ளுவார்கள். இல்லாவிட்டால் செய்து வைத்திருப்பவர்களிடம் இலவசமாக வாங்கிக்கொள்ளுவார்கள். இந்த வைத்தியம் நம்நாட்டைவிட்டு நழுவிக்கொண்டே போகிறது.

வைத்தியத்தின் முக்கிய பாகங்கள் நமது நாட்டிலிருந்து ஆசியாகண்டத்தின் மற்ற பாகங்களுக்கும் அங்கிருந்து மேனாட்டிற்கும் பரவிற்று என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுவதில் உண்மை இல்லாமலில்லை. அதன் கதைகளையும் திருஷ்டாந்தங்களையும் எடுத்துச் சொன்னால் விஷயம் விரிந்துவிடும். விசேஷமான அநேகங்களில் ஒன்றைச் சொல்லுகிறேன். வீட்டின் மூலைமுடுக்குகளில் எட்டுக்கால் பூச்சிகள் கட்டுங்கூடு உங்களுக்குத் தெரியும். அந்தக்கூட்டை அரைத்தும் பிளகை கஷாயம் செய்தும் சுரத்திற்குக் கொடுப்பது நம்நாட்டுவழக்கம். ராஜவியாதியென்று சொல்லக்கூடிய க்ஷயம் நீர் ரோகம் முதலிய வியாதிகளுக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த ஆயுர் வேத மருந்துகளான மிருகாங்கம் ராஜமிருகாங்கம் என்கிற மருந்துகளுடன் அனுபானமாகக்கொடுப்பது பூச்சிவலையே. அந்தவியாதிகளினால் உண்டாகும் சுரத்திற்கும இருமலுக்கும் இவை விசேடமென்றே அந்த மருந்துகளுடன் அனுபானமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. யூனானி வைத்தியத்திலும் அதன் குணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஹோமியோபதி என்னும் வைத்தியத்தைக் கண்டுபிடித்த டாக்டர் ஹனிமன் எழுதின பதார்த்த குண புத்தகத்திலும அமெரிக்க டாக்டர் எல்லிங்வுட் எழுதின மெட்டீரியா மெடிகாவிலும் எட்டுக்கால் பூச்சிக்கூட்டை கஷாயமாகவோ டிஞ்சராகவோ செய்து சுரத்திற்கும் இருமலுக்கும் கொடுக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அமெரிக்க டாக்டர்களும் இங்கிலாந்து டாக்டர்களும் நம் தேசத்தின் மூலமாகப் பூச்சிக்கூட்டைப்பற்றித் தெரியாமல் அவர்களின் ஆராய்ச்சியால் தெரிந்தாலும் நம் நாட்டு ஜனங்கள் சாதாரணமான அநேகர் இதைப்பற்றி அநேககாலங்களாகத் தெரிந்திருந்தார்கள் என்பதே ஆச்சரியமல்லவா? வனத்தில் வசிக்கும் வேடர்களும் ஆடுமாடு மேய்ப்பவர்களும் உழவுத்தொழில் செய்யும் குடியானவர்களும் சிற்சில மருந்துகளின் நாம ரூபங்களையும் குணங்களையும் அறிந்திருப்பினும் வைத்தியர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்பது ஞாயமாக இருந்தாலும் அவர்களால் தெரியப்பட்ட பதார்த்தங்களின் குணங்களையும் பரிகாரங்களையும் சாஸ்திரம் தெரிந்தவைத்தியர்கள் தெரிந்து கொண்டால் நன்மையுண்டு என்றே சொல்லுகிறேன்.

நமது வைத்தியத்தில். மணி, மந்திரம். ஔஷதம் என மூன்றும் சேர்ந்தே வைத்தியமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மணி என்றால் பார்வை என்று அர்த்தம். சுத்த மனதினால் ஜீவகாருண்ய அன்பு மிகுந்த உத்தமர்கள் பார்வையே மணி எனப்படும். இதை "ஞானிகள் விழிபட ஓடு வினை" என்பதால் உணரலாம். மந்திரமென்பது மனோ சங்கல்ப எண்ணங்களை ஒருவழிப்படுத்தி இந்த வியாதி நீங்கவேண்டுமென்று திடமாக எண்ணுவது. இதையே மெஸ்மெரிஸமென்றும் இப்னடிசமென்றும் மேனாட்டார்கள் சொல்லுவார்கள், இதற்கும் நமது மந்திரங்களுக்கும் வித்தியாசம் கற்பித்தாலும் அந்த பாஷைகளில் இரண்டுமொன்றே. பின் மருந்தும் மேற்சொன்ன இரண்டும் வைத்தியனுக்கு வசப்பட்டி

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

## ஐயவினாக்களின் 'விடை'களுக்கு விளக்கம் தேவை.

திரு சந்திரசேகரப் பாவலர் அவர்களுக்கு 'சுயமரியாதை விரும்பும் நேசன்' எழுதுவது,

அன்புமிக்க ஐயா,

தாங்கள் 16—12—28 ல் 'குடி அரசில்' காரைக்குடி திரு. ஆ. சொக்கலிங்கம் அவர்களின் ஐயவினாக்களுக்கு விடையளித்துள்ளீர்கள். அது பொது ஜனங்களின் திருப்திக்குப் போதுமானதாயில்லாததால் அடியில் காணும் சந்தேகங்களையும் தீர்த்து தங்கள் கடனாற்றக்கோருகிறேன்.

1. இராமாயணம் நடந்த கதையாயிருப்பினும் கட்டுக்கதையாயினும் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் சிற்சில பாகந்தவிர மற்றவைகள் பொது ஜனங்களை நல்வழிப்படுத்த சான்றாக இருப்பதால் ஜனங்கள் நடந்த கதையாகக்கொள்வதால் நஷ்டம் என்ன? அந்த சிற்சில பாகமும் திருத்தப்பட்டால் போதாதா? இராமாயணம் படிப்பதால் கெட்டுப்போனவர்களைவிட நல்வழிப்பட்டவர்களைத்தானே அதிகமாகப் பார்க்கிறோம். இதனால் நஷ்டம் என்ன?

2. முதல் விடையில் நடந்த கதையல்லவென்று தெரிவித்த தாங்கள் அடுத்தாற்போல் ராமன் என்ற ஆரிய மன்னன் தமிழரைவென்ற கதையை வால்மீகி அய்யங்கார் கவியைப்போன்று திருமாலின் அவதாரமெனக்கூட்டி எழுதியதாகச் சொல்கிறீர்கள். இராமன் என்ற அரசன் எந்தக் காலத்தில் இருந்தான்? தமிழரை எப்போது வென்றான்? அது உண்மையாக நடந்த வரலாறு எப்படி? வால்மீகி எப்படித்திரித்துக் கூறுகிறார்? என்பதற்கு சரித்திர ஆதாரம் இருக்கிறதா? அறிஞரின் துணிவு என்றால் போதுமா? எந்த அறிஞர்? அவருக்கு அத்தாட்சி எது?

3. கபாடபுரத்தின் வரலாறு தாங்கள் குறிப்பிட்ட காலத்தில் கதை எழுதப்பட்டதைக்குறிக்கிறதே தவிர நடந்ததென்பதைக் குறிக்க ஆதாரம் எது? குறிப்பிட்ட ஊர்களைப் பொருத்து இராவணன் தமிழ்மகன் இராமன் ஆரியன் என்று சொல்லமுடியுமா? இராமாயணத்தைப் படிப்போர் அவ்வாறு நினைக்கிறார்களா? நினைத்தால் அப்போதே இராமாயணம் தொலைந்திராதா? முதலில் எழுதிய வால்மீகியும் அவ்வாறு கூறியிருக்கும்போது தாங்கள் ஏன் கற்பித்துக்கொள்ள வேண்டும்?

4. வால்மீகியின் நடையை கம்பர் மாற்றியது சுயமரியாதையின் உதயமல்லவா? அதற்காக வருத்தப்படுவானேன்? இராம கதையில் தமிழரை இழிவுபடுத்தும் பாகத்தை கம்பர் ஒளித்திருக்கிறார் என்கிறீர்கள். ஆரியர் தமிழரை இழிவுபடுத்த எழுதிய கதை என்று கம்பர் அறிந்திருந்தார் என்பதற்கும் தாங்கள் இப்போது அவ்வாறு கொள்வதற்கும் ஆதாரம் எது?

5. ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு கதையை மாற்றுவதால் பயன் என்ன? அக்கதையின் சற்பாத்திரங்களை அசற்பாத்திரமாகக்கொள்ளும்படி செய்வது பலரின் மனதைப் புண்படுத்துவதைத் தவிர லாபமென்னவிருக்கிறது? கதையிலே ஒரு சாரார் பிழைப்பதைமட்டும் எடுத்துக்காட்டிக் குற்றங்களைத் திருத்துவதுடன் மட்டும் நில்லாமல் தாங்கள் இராமாயணக் கட்டுரைகளால் சுயமரியாதையைப்பரப்பும் வேலைக்கு இடையூறாகிறதை அறிவீர்களா? இராமாயணத்தைப்பற்றி முற்றிலும் வெறுக்கத்தக்கவாறு தாங்கள் எழுதிவருவதால 'குடி அரசின்' இதழ்கள் பல ராபர் உடைக்கப்படாமலேயே குப்பைக்குப்போவது தங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறேன். இதனால் 'குடி அரசில்' வெளியாகும் இதரபல முக்கிய கட்டுரைகளையும் மறைத்து வைத்தவராகிறீர் தங்களின் விரிவான நோக்கத்தை விரைவில் விளக்கக் கோருகின்றேன்.

## 'சுயமரியாதைவிரும்பும்நேச'னுக்கு திரு. சந்திரசேகரப்பாவலரின் மறுமொழி.

(1) தமிழ்ப்பொதுமக்கள் இராமாயணத்தை நடந்த கதையாகக் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் கேடொன்றுமில்லை. ஆனால் அவர்கள் அது தம்மவர் வரலாறு என்று மயங்கிப் படிக்கும் போதுதான் கேடுவருவதாம். ஏனெனில் தம்மவரை இழிவுபடுத்தி இகழ்ந்தும் பகைவரைப்புகழ்ந்தும் உள்ள நூலைப் பொது மக்கள் பாராட்டி அறியாமையிற் படித்து வருவாரேல் அதைப்போலும் இழிவு அவர்களுக்கு வேறு வேண்டுமோ? ஆகலின் உண்மையை எடுத்துக்காட்டிப் பொது மக்களை நல்ல வழியிலே செலுத்துவதற்கு அறிஞர் யாவரும் கடமைப்பட்டவராவர். அதனால் அறிஞராகிய நமது சுயமரியாதை விரும்பும் நேசரும் அக்கடமையுடையவரே. பொது மக்களை நல்வழிப்படுத்துவதற்குத் தடையாகவுள்ள சிற்சில பாகங்கள் இராமாயணத்தில் இருப்பதாகக் கொண்டு அவைகளை மட்டும் திருத்தினால் போதாதா என்று வினவுகிறார் நேசர். மணற் சோற்றில் கல்லைத்தேடினாற் போலவே தீமைதரும் பாகங்களை இராமாயணத்தில் தேடுவது. ஏனெனில் மணற் சோறு முழுதும் தீமை விளைக்கும் பாகங்களே நிரம்பியுள்ளது. இராமாயணம் படித்தோர் நலம் பெறுவரென்பது முயற்கொம்பே. 'இராமாயணம் படித்ததால் கெட்டுப் போனவர்களைத் தவிர நல்வழிப்பட்டவர்களைத் தானே அதிகமாகப் பார்க்கிறோம்" என்கிறார் நேசர். இதனால் அவர் இராமாயணம் படித்ததால் கேடடைந்தோரும் சிலர் உளரென உடன்படுகிறார். ஆனால் அவர் நலம் பெற்றோர் ஒருவரையாவது காட்டுவாரா? அவரால் முடியாது, முடியாது. அவர் அன்பு கூர்ந்து நலம் பெற்றோர் இவரெனவும் இன்ன விதமான நலம் பெற்றோரெனவும் எடுத்துக்காட்டாது வாளா நலம் பெற்றோருளரென வரைதலால் பயன் என்னே? மேலும் நலம் பெற்றோர் ஒருவரும் இலரென்பதற்கு நமது நேசரின் கட்டுரையே சான்றாகும். எவ்வாறெனில் சுயமரியாதை விரும்பும் நமது நேசரே இதுவரை நாம் எழுதிவரும் கட்டுரைகளைப் படித்தும் தமிழ் மக்களாகிய வாலி முதலியோரைக் குரங்குகளெனவும் இராவணேச்சுவரன் முதலியோரை அரக்கரெனவும் இழிவுபடுத்துவதோடு நில்லாமல் அத்தமிழ் முடிவேந்தரையும் அவரைச்சார்ந்த வீரரையும் வஞ்சித்துக் கொன்று பழிப்பட்ட சகோதரத் துரோகியாகிய பொய்யனாகிய இராமனுடைய வரலாற்றை இன்னும் நம்பியிருக்கின்றாரே! அறிஞராகிய இவரே இந்நிலையினரென்னில் ஏனையோரைக் கூறவும் வேண்டுமோ? நமது நேசர் இராமாயணத்தில் சுயமரியாதைக்குப் பங்கம் விளைக்கும் சிற்சில பாகங்களாவது இருக்கின்றன என்று கருதுகின்றமையை யறிந்து பெருமகிழ்ச்சியடைந்தோம். இனியாவது நமது நேசரை நமது கட்டுரைகளை மறுமுறை படித்து வால்மீகி இராமாயணத்தையும் படிக்குமாறு வேண்டுகின்றோம். படிப்பரேல் இராமாயணம் முழுவதும் மணற்சோறே என்பதை உணருவர். மேலும் அந்நூலில் நலந்தரும் பாகமும் இருக்குமோ? தமிழ் மக்கள் தமது முன்னோராகிய இராவணன் முதலியோரைத் தீயரெனவும் பகைவராகிய இராமன் முதலியோரை நல்லோரெனவும் சித்திரித்துக் கூறும் கதையைப்படித்து உண்மை அறியாமையால் தமது

முன்னோராகிய இராவணன் முதலியோரைத் தமது பகைவர் போல் நம்பித் தாமும் இகழ்வதும் பகைவராகிய இராமன் முதலியோரைத் தாமும் புகழ்வதும் சுயமரியாதைக்குக் கேடு விளைக்கும் செயல்களே. அவை அறிவுடைமையுமாகாது உண்மையுமாகாது என்பதை இனியாவது நமது நேசர் தெரிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(2, 3) இத்தலைப்பில் நமது நேசர் எழுதியுள்ளனவற்றுக்கு மறுமொழியாக அவரை நாம் முன்னர் எழுதியுள்ள 'விடை'யையே நன்றாகப் படித்துப் பார்க்க வேண்டுகின்றோம். "முதல் விடையில் நடந்த கதையல்லவென்று தெரிவித்த தாங்கள்" என்று எழுதுகின்றனர் நமது நேசர்: இது தவறு என்பதை அவர் மறுமுறை நமது விடையைப் படித்துப் பார்த்தால் உணர்வார். "ஆராய்ச்சிகாரர்கள் இராமாயணம் நடந்த காலத்தைத் தீர்மானிக்கப் போதிய சான்றுகள்கிடையாமையால் அது நடந்ததொன்றன்று என்று கூறுகின்றனர், அக்கூற்றைப் பொது மக்கள் நம்பார்" என்றே நாம் குறித்துள்ளோம். "கபாடபுரத்தின் வரலாறு தாங்கள் குறிப்பிட்ட காலத்தில் கதை எழுதப்பட்டதைக் குறிக்கிறதே தவிர நடந்ததென்பதைக் குறிக்க ஆதாரம் எது?" என்று வினவுகிறார் நேசர். இது வியப்பாகவே உள்ளது. ஏனெனில் கபாடபுரத்தைப்பற்றி இலங்கைக்குப் போகும் வழி கூறுமிடத்து ஓர் நூலில் கூறப்பெற்றிருந்தால் அந்நூல் வரலாறு நடைபெறும் போது அக்கபாடபுரம் இருந்ததென அறியலாமே யன்றி அந்நூல் எழுதப்பட்ட காலத்திலிருந்ததென எவ்வாறு அறியலாம்? மேலும் இராமாயணம் என்ற நூல் வால்மீகி முனிவரால் எழுதப் பெற்று இராமனுடைய பிள்ளைகளாலேயே இராமனது முன்னிலையில் பாடப் பெற்றது என்ற வரலாறே எப்படியாவது அது கபாட புரவரலாற்றுக் காலத்தில் நடந்ததெனக் கொள்வதற்குத் தகுந்த ஆதாரமாம்.

"இராமாயணத்தைப் படிப்போர் இராவணன் தமிழ் மகன், இராமன் ஆரியன் என்று நினைக்கிறார்களா? நினைத்தால் அப்போதே இராமாயணம் தொலைந்திராதா" என நமது நேசர் எழுதுகிறார். நேசர் கூறும் மொழிகளைப் பொன்மொழிகளாகவே போற்றுதல் வேண்டும். ஏனெனில் இவையனைத்தும் உண்மை மொழிகளே. இராமன் ஆரியன் இராவணன் தமிழ் மகன் என்ற உண்மை உணராது தமிழ் மக்கள் இராமாயணத்தைப் படித்துப் பாழாகின்றனரே எனவே உண்மையறிவாளிகள் கவல்கின்றனர். ஏனெனில் இவ்வுண்மை அறிவு எப்போது தோன்றுகின்றதோ அப்போதே தமிழ் மக்களிடை இராமாயணம் தொலைந்துவிடும். தமிழ்ப் பொது மக்களுக்கு இவ்வுண்மையை எடுத்துக்காட்ட வேண்டுவதே ஒவ்வொரு கற்றுணர்ந்த அறிஞரின் கடமையாகும்.

இராமன் ஆரியன், இராவணன் தமிழ் மகன், என்பதை நாம் கற்பித்துக்கொள்ளவில்லை. இராமன் வாழ்ந்தது வடநாடு. இராவணன் வாழ்ந்தது தென்னாடு; அப்போது கபாடபுரமிருந்தது. என்பதனால் இராமன் ஆரியன் என்பதும் இராவணன் தமிழ் மகன் என்பதும் விளங்கவில்லையா? இதற்குச்சரித்திர ஆராய்ச்சி வேண்டியதும் வேண்டாம். ஆரியர் இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் வடக்கில் இருந்து வந்து ... வட இந்தியாவிற் குடியேறினர் என்றும் ஆரியர் பல போரிட்டுத் தென்னிந்தியாவிலும் பரவத் தொடங்கினரெனவும், தென்னிந்தியாவில் வாழ்ந்திருந்தோர் தமிழரெனவும் இந்திய தேசசரித்திர நூல்கள் கூறும் உண்மைகளைப் பள்ளிச் சிறுவரும் அறிவர். ஆரியர் புலனுணர்வில் விருப்பமிக்குடையோர், தமிழ் மக்கள் புலனடக்கமுடையோர், இராமனுக்கு

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.)

## செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாடு.

### திரு. சௌந்திரபாண்டியரின் அக்கிராசனப் பிரசங்கம்.

(தொடர்ச்சி)

நேயர்களே! அமெரிக்காவில், பதினெட்டாம் நூற்றாண்டுவரை அடிமை வியாபாரம் மிகுந்திருந்த காலத்தையும் ஜார்ஜ் வாஷிங்டன் காலத்துக்குப் பின்னால் ஏற்பட்ட குடியரசின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மக்களை விலங்கினம் போன்று விலைக்கு விற்ற காலத்தைவிட ஜார்ஜ் வாஷிங்டனுக்குப் பின்னால் உள்ள காலம் அநேக கோடி மடங்கு மாண்புற்றதென்பதையாரே மறுப்பர். துருக்கியில் மதத்தின்பேரால் வகுக்கப்பட்ட அநீதங்களை அரசாங்க உத்தரவின் மூலம் ஒழித்ததாலன்றோ கெமால் வீரனின் பெருமை உலகினருக்குத் தெரிந்தது. துருக்கியும் உலக அரசுகளில் ஒன்றாய் விளங்குகிறது. ஆப்கனிஸ்தானத்தில் சமூகக் கிளர்ச்சியால் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டிருக்கிறதெனினும், இறுதியில் அமீர் அமானுல்லாக்கான் வெற்றி பெறுவாரென்பது திண்ணம். மூட முல்லாக்களும், அவர் தம வைதீகக் கோஷ்டியினரும் முறியடிக்கப்படுவாரென்பதில் சந்தேகமில்லை. ஆகவே அரசியல் சுதந்திரத்திற்குச் சமூக விடுதலை அடிப்படையாகவிருக்கிறதென்பது வெள்ளிடைமலை.

பிரிட்டிஷ் இந்தியாவை விட சுதேச சமஸ்தானங்களிலும் பரிபூரண சுயேச்சை நாடுகளிலுமே சமூகக் கொடுமைகள் அதிகமிருக்கின்றன. சுதேச சமஸ்தானங்களில் வைக்கம் போன்ற ஆவேஷம் மிகுந்த கிராமங்களுக்கு சம்பூதரிகளுக்கு நங்கைகளை அன்பளிப்பாக்கிச் சிக்கு அனுப்பும் அநுசார வழக்கங்களும் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுடைய சகோதர வஞ்சையுடன் சமத்துவமாக வாழவேண்டுமென்ற கருத்துடன், அகில இந்திய மகாநாடுகள் கூடும் காலத்தில் நேப்பால் போன்ற பரிபூரண சுயேச்சை பெற்ற நாட்டில் பார்க்கக்கூடாத வகுப்பினர் இருக்கின்றார்கள் என்பதும் பிரிட்டிஷ் இந்தியாவில் இல்லை.

ஆனால், அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில் தான் பல சீர்திருத்தங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கணவனிறந்த காலத்தில் தானும் நெருப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் சதியென்னும் உடன்கட்டையேறுதலான கொடிய வழக்கம் ஒழிக்கப் பெற்றிருக்கிறது. இந்திய சட்டசபையில் திரு. சாரதாவின் பால்ய விவாகத் தடுப்பு மசோதா நிறைவேறும் தருவாயிலிருக்கிறது. இணக்க வயது மசோதாவைப் பெரும் பகுதியினர் போற்றுகின்றனர். சென்னையிலும் தேவதாசி மசோதா சட்டமாக்கப்பட்டது. மக்களுக்குள் சமத்துவம் மறுக்கும் கல்விச்சாலைகளுக்குத் தற்போதைய கல்வியிலாக்கா மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களால் அரசாங்க சார்பில் கிராண்டு கொடுப்பதில்லை போன்ற சட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மேலே குறிப்பிட்டிருக்கின்ற சில உதாரணங்களினால் சமுதாயச் சீர்திருத்தமே முதலாவது வேண்டுமென்றும், அவ்விதச் சீர்திருத்தத்தை அரசியல் நிலை பாதிக்காதென்றும் நன்றாய் விளங்குகின்றது. ஆதலால் சமுதாய சீர்திருத்தம் நம்நாட்டில் அவசியத்திலும் அவசியம். யார் யார் என்ன கூறினாலும் நமது இயக்கத்தை நாம் பலப்படுத்துவோமாக. அதற்கான திட்டங்களை ஏற்படுத்துவோமாக.

நாம் நமது இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டுமானால் அதற்கென ஒரு சிறந்த அமைப்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பொறுப்புள்ள மத்திய சபையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஜில்லாக் கிளைகள், தாலூகாக் கிளைகள், நகரக்கிளைகள், ஏற்பட வேண்டும். இக்கிளைகளின் சார்பாக வருடந்தோறும், தாலூகா ஜில்லா மகாநாடுகள் நடத்தப்படல் வேண்டும். இத்தகைய மகாநாடுகளால் ஏற்படும் பலனைப் பொதுவாக எடுத்துப் பார்ப்போமானால் மனிதர்களுக்குள் காலாகாலங்களில் ஏற்படும் பரஸ்பர நம்பிக்கையை விருத்தி செய்து அன்பை வளர்ப்பதே இத்தகைய மகாநாடுகளாகும். பலதர அபிப்பிராயத்தினரும் கூடி பொது முடிவுக்கு வரச் சாதனங்களாக விருப்பவைகளும் இவைகளே. ஆகவே கிராமங்கள் தோறும் நம் இயக்கம் பரவ வேண்டுமென்ற விருப்புடைய ஆலோசனைக் கமிட்டியாரும் மற்றப் பிரதிநிதிகளும் இவ்விஷயத்தை ஊன்றி நோக்குவார்களாக.

பிறகு, நமது இயக்கத்தை அகில இந்திய இயக்கமாக்கும் விஷயம் சிந்திக்கற்பாலது. நாம் நமது தொண்டை நமது மாகாண எல்லையை விட்டுப் பிறமாகாணங்களிலும், செய்ய வேண்டுதல் அவசியமாகும். இவ்விதம் செய்வதற்கு தற்சமயம் ஓர் நற்சந்தர்ப்பமென்றே நம்புகிறேன். தேசத்தின் பல பாகங்களிலும், சமுதாய இயக்கங்களுக்கு ஆதரவான குறிப்புகள் பல தென்படுகின்றன. பம்பாய், மைசூர், மத்திய மாகாணங்களில் தோன்றியுள்ள பார்ப்பனரல்லாதார் எழுச்சி என் அபிப்பிராயத்தை ஆமோதம் செய்பவைகளாக விளங்குகின்றன.

பம்பாயில் கூடிய அகில இந்திய சமூக சீர்திருத்த மகாநாட்டில் ஸ்ரீ ஜெயகர் அவர்கள் நிகழ்த்திய அக்கிராசனப் பேருரையை ஊன்றி நோக்குங்கள். கல்கத்தாவில் இதே மகாநாட்டில் பேசிய ஸ்ரீ சி. ஒய். சிந்தாமணியவர்களின் பிரசங்கத்தைப் படித்தறியுங்கள். லக்னோவில் இணக்க வயதுக் கமிட்டி முன்பாக சர். டேஜ்பகதூர் சாப்ரூ அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தை ஆய்ந்தோய்ந்து பாருங்கள். ஒவ்வொருவரும் சமூக சீர்திருத்த அவசியத்தை வலியுறுத்தியும் புரோகித ஆட்சியத்தை வன்மையாகக் கண்டித்தும் பேசியுள்ளார்கள். ஆகவே வட இந்தியாவில் பிராமணரும், பிராமணரல்லாதாரும், இப்பணியில் முனைந்து நிற்கின்றார்களென்பது வெளிப்படை. ஆதலால் நாம் இந்த சந்தர்ப்பத்தைக் கைவிடாது அகில இந்திய மகாநாடு ஒன்று கூட்டிப் பலரையும் இணைத்து ஒரு கல்லியக்கம் ஆரம்பிப்பது மிகவும் பலன் அளிக்குமென எண்ணுகிறேன்.



செங்கல்பட்டு மகாநாட்டு தலைவர் திரு. சௌந்தரபாண்டியர்.

### சைமன் கமிஷன்.

இந்தியாவிற்கு அடுத்தபடியாக எவ்வித



செங்கற்பட்டு மகாநாட்டில் சுயமரியாதைக்
கொடியை உயர்த்திய
திரு. பி. டி. ராஜன் அவர்கள்.

சீர்திருத்தம் வழங்க வேண்டுமென்று விசாரித்தறிய மன்னர் பிரானால் அனுப்பப்பட்ட சைமன் கமிஷன் இப்போது நடைபெறும் தன் விசாரணைக் கடனை ஆற்றி வருகின்றது. இப்பொழுது கமிஷனை வரவேற்பதா, பகிஷ்கரிப்பதா வென்ற பிரசினையே நம்மை வாட்டுகின்றது. பகிஷ்காரத்தின் சார்பாக ஆரம்பத்தில் இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. முதலாவதாக கமிஷனில் இந்தியர்கள் அங்கம் பெறவில்லை, இரண்டாவதாக கமிஷனில் இரகசிய விசாரணை அந்தரங்க விசாரணையை நிறுத்திக் கொள்வதாகவும் கமிஷனுக்கு அனுப்பும் யாதாஸ்துக்களைப் பார்க்கவும் விவாதிக்கவும், சட்டசபை கமிட்டிக்குச் சுதந்திரம் உண்டென்று கூறியவுடன் இரண்டாவது காரணம் மறைந்துவிட்டது. முதலாவது காரணத்தை கவனிப்போம் நமமைப் பொறுத்தமட்டில் ஜாதித் துவேஷம், மதவேற்றுமை, சுயநலம், ஒரு வகுப்புக்கோர் நீதி வழங்கும் இந்தியர்களை அங்கத்தினர்களாகக் கொள்ளாத, ஒரு கமிஷனை நமக்குத் தேவையென நான் எண்ணுகிறேன். தென்னிந்திய பிராமணர் ஒருவன் அங்கம் பெற்றால் பிராமணரல்லாதார் குறைகள் கவனிக்கப்படாதென்பது நிச்சயம். வட இந்திய முஸ்லிம் ஒருவர் அங்கம் பெற்றால் இந்துக்களின் குறைகள் தீரப்போவதில்லை. ஆகவே ஒரு தனிப்பட்ட சமூகத்துக்கு மட்டும் இக்கமிஷனால் குரோதம் ஏற்பட்டு விடாது. எல்லாச் சமூகங்களும் ஒன்றாகவே பாவிக்கப்பட்டு அவரவர் குறைகளுக்கேற்ப சீர்திருத்தம் வழங்கப்படுதல் நிச்சயம். ஆகவே, இந்தியரல்லாத பாரபட்சமற்ற இக்கமிஷனை நாம் வரவேற்கவேண்டுமென்று நான் கூறுகிறேன். பின் ஏன் சைமன் கமிஷன் பகிஷ்காரக் கூச்சலிடுகின்றனர்? அக்கேள்விக்கு விடையளிக்குமுன் 1927-ம் ஆண்டில் இதே சைமன் கமிஷன் விஷயமாக நாட்டில் நடந்த கிளர்ச்சிகளை, நண்பர்கள் ஞாபகப்படுத்துமாறு வேண்டுகின்றேன். அக்காலத்தில் இக்கமிஷனை 1928-ம் ஞூ ஆரம்பத்தில் இந்தியாவுக்கு அனுப்புவதா 1929ம் ஞூத்தில் அனுப்புவதா வென்கின்ற பிரசினை பிரிட்டிஷ் பார்லிமெண்டில விவாதத்துக்கு வந்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அது சமயம் பகிஷ்காரக் கூச்சலில் முனைந்திருக்கும் தென்னிந்திய, வட இந்திய பார்ப்பனத் தலைவர் யாவரும் 1929ம் ஞூ வரை இந்தியா காத்திருக்க முடியாது, அரசியல் கமிஷனை உடனே அனுப்பவேண்டுமெனப் பார்லிமெண்டை கோக்கித் தவமிருந்தனர். தவமிருந்தவுடன் கமிஷன் அங்கத்தினரின் நாமங்கள் வெளியிடும்வரை, கம்பியில்லாத் தந்திச் செய்திகளையும், பிரிட்டிஷ் பத்திரிகைகளையும், அரசாங்க கெஜட்டுகளையும் எதிர்பார்த்திருந்தனர். பகிஷ்காரத்தைப்பற்றி மனதில் எண்ணவுமில்லை, இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு சுதந்திரமில்லை யென்ற ஞானம் உதயமாகவுமில்லை. ஆனால் 1927-ம் ஞூ இறுதியில் அங்கத்தினரின் பேர்கள் வெளிவந்தன. பல தலைவர்களும், பேர்களை மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்த்தனர். தம் நாமங்கள் அவைகளில் தோன்றவில்லை, பிரத்தியேக லிஸ்டு வெளியாகுமெனச் சிலகாலம் எதிர்ப்பார்த்தனர். ஆனால் இவைகளெல்லாம் இவர்கள் ஏமாற்றமடைந்தனர். இந்த ஏமாற்றத்தால் தான் பகிஷ்கார ஞானம் பிறந்தது. ஆதலால் இப்பொழுது, நாட்டில் கிளம்பியிருக்கும் கூச்சல்களெல்லாம் ஏமாற்றத்தால் ஏற்பட்ட பார்ப்பன வயிற்றெரிச்சல் கூச்சல்களாகும். உண்மையை உணராத பார்ப்பனரல்லாத சிலரும் இவ்வியக்கத்தில் இறங்கியிருப்பது குறித்து மிகவும் பரிதாபப்படுகிறேன். ஆகவே நாம் கமிஷனை வரவேற்பது அவர்களிடம் நமது சமூகாயக் குறைபாடுகளையும், பார்ப்பனரின் அட்டூழியங்களையும் எடுத்து ஓதி நமது கொள்கைகளை வலியுறுத்த வேண்டும்.

## இளைஞர் இயக்கம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜன சமூகமும், நாடும் திடமான முன்னேற்ற மடைந்தது, அத்தேச வாலிபர்களின் முயற்சியாலேயே முதிர்ந்த அநுபோக சாலிகளின் தலைமையின் கீழ் வாலிபர் தொண்டு செய்ய ஆரம்பிக்கின், அவர் எடுத்த கருமம் கைகூடாமற் போகாது. இதை எண்ணியே கிரேக்க தேசத்துத் தத்துவ ஞானியான சாக்ரட்டீஸ் என்பவரும், உலகமெங்கும் புகழ்ப்படைத்த ஸ்வாமி விவேகாநந்தரும, "என்மனம் வாலிபர்களையே நாடுகிறது" என்று கூறியுள்ளார்கள். "வாட்டர்லூ யுத்தம் ஈட்டோனியர்களால் ஜெயிக்கப்பட்டது" எனும் பழமொழி எதைக்குறிக்கின்றது? இங்கிலாந்தின் தலைவிதியை மாற்றக்கூடிய வண்ணம் "வாட்டர்லூ" என்னுமிடத்தில் ஈட்டன் கலாசாலையில் கல்வி கற்று வந்த வாலிபர்களின் உதவியால் ஆங்கிலேயர்களுக்குண்டான வெற்றியைக் குறிக்கின்றதல்லவா? உலகத்தோர் பிரமிக்கும்படி



செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டு
வரவேற்புக் கழகத் தலைவர்
திரு யம். கே. சாமி அவர்கள்.

தங்கள் நாடுகளை சீர்திருத்தம் செய்த கெமால் பாஷா போன்றவர்களும் அவர்கள் தம் சிஷ்யர்களும், வாலிபர்களன்றோ? பழைய உலக முழுதும் ஜெயித்து வெற்றிக்கொடி நாட்டிய அலெக்சாண்டரும், அவருடைய சேனைகளும் வாலிபர்களன்றோ? சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் இருந்த இடம் தெரியாமலிருந்த ஜப்பான் இன்று கிழக்கு பிரிட்டன் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், அதன் வாலிபர்களின் முயற்சியன்றோ? இத்தனைப் பெருமையை அடக்கிக்கொண்டிருக்கும் வாலிபர்களே! நான் உங்களை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு. கெமால் பாஷாவைப் போன்றும் ஆப்கன் அமீரைப் போன்றும், பெரியதோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நீங்கள் கஷ்டப்பட நான் விரும்பவில்லை. ஈட்டன் மாணவர்களை போன்று ஆயுதம் கொண்டு போர் முனையில் யுத்தம் புரிய வேண்டவில்லை. ஒத்துழையாமை இயக்கக்கர்த்தாக்களைப் போன்று படிப்பையும், தொழிலையும் விட்டுவிட்டு ஜெயிலுக்கு போகுமாறு உங்களை நான் அழைக்கவில்லை. ஆனால் நம் சமூகத்தில் மதத்தின் பேரால், சாஸ்திரத்தின் பேரால், வேதத்தின் பேரால் நடந்துவரும் கொடிய பழக்க வழக்கங்களைக் களைந்தெறிய கிராமப்பிரசாரம் செய்ய முன்வாருங்களென்றே வேண்டுகின்றேன். அறுபது வயதுக்கு மேற்பட்ட சுப்பையா பிள்ளை யென்ற உங்கள் தாதாவை பத்து வயதுப் பார்ப்பனப் பாலகன் அடே சுப்பா வென்று அழைக்க இன்னும் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றீர்களா? பார்ப்பான் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து அவன் காலைக் கழுவிய தண்ணீரை அருந்த இன்னும் சம்மதிக்கிறீர்களா? உங்கள் முன்பாட்டனரின்

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க).

# செங்கற்பட்டு மகாநாட்டு தீர்மானங்களும், ஜஸ்டிஸ் பத்திரிகையும்.

செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி சென்னை ஜஸ்டிஸ் பத்திரிகை ஒருவாறு புகழ்ந்து எழுதியிருப்பதாகக் காணப்பட்டாலும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றி தனது அபிப்பிராயத்தை தெரிவித்திருப்பதில் மிக முக்கியமான தீர்மானங்கள் என்று பொதுஜனங்களால் கருதப்படும் தீர்மானங்கள் விஷயத்தில் அது தனக்கு உள்ள அபிப்பிராய பேதத்தை காட்டியிருக்கின்றதை நாம் மனப்பூர்வமாய் வரவேற்று சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனெனில் அவரவர்களுக்குத் தோன்றும் எந்த விஷயங்களைப் பற்றியானாலும் அபிப்பிராய பேதங்களையும் அதனால் ஏற்படக்கூடிய சாதகபாதகங்களையும் எடுத்துச் சொல்ல யாவருக்கும் உரிமை உண்டு என்பதையும் அவ்வித அபிப்பிராய பேதத்தையும் கண்ணியமாய் வரவேற்று சமாதானம் சொல்ல வேண்டியது மிகவும் நியாயமானது என்பதையும் நாம் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆதலால் அம்முறையிலேயே ஜஸ்டிஸ் சில தீர்மானங்களைப் பற்றி அபிப்பிராய பேதங்களையும் அதன் நியாய விளக்கத்தையும் கவனிப்போம். அதாவது,

கலியாண சுயமரியாதையாகவும் பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள உரிமை சமமாகவும் செய்த ஒரு தீர்மானத்தைப் பற்றியும் கடவுளுக்கு வணக்கத்திற்கென்று பணம் செலவு செய்யக்கூடாது என்கின்ற தீர்மானத்தைப்பற்றியும் ஜஸ்டிஸ் எழுதுகின்றபோது, பொது ஜனங்கள் அத்தீர்மானங்களுக்கு சம்மதமாய் அபிப்பிராயம் கொடுக்கவில்லை என்றும் அன்றியும் அவர்கள் ஏக மனதான சம்மதத்தைப் பெறமுடியாது, என்றும் எழுதியிருக்கின்றது. இந்த இடத்தில் ஜஸ்டிஸ் நிருபராக நடந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக் காட்ட வருத்தப்படுகின்றோம். ஏனெனில் கலியாண சுயமரியாதை தீர்மானத்திற்கு அவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு சிறு ஆட்சேபனை கூட கிளம்பவேயில்லை. ஒரே ஒரு வாலிபர் புருஷனும் பெண்ஜாதியும் பிரிந்து கொண்டால் குழந்தை யாரைச் சேர்ந்தது என்று மாத்திரம் கேட்டார். உடனே ஒருவர் தகப்பனைச் சேர்ந்தது என்று சொன்னார். இதைத்தவிர வேறு எந்த விதமான ஆக்ஷேபனையாவது ஆக்ஷேபனைக் குறியாவது அங்கு நிகழவேயில்லை. அப்படியிருக்க மகாநாட்டுக்கூட்டத்தில் அதற்கு ஒரு வித சம்மதமில்லை என்று எழுதியிருப்பது வருந்தத்தக்கதே ஆகும்.

தவிர கோவிலில் கடவுளை வணங்கும் விஷயத்தில் பணம் செலவழிக்கக் கூடாது என்கின்ற தீர்மான விஷயத்தில் சிலர் ஆட்சேபனை இருந்தது மெய்தான். அதுவும் ஜஸ்டிஸ் கட்சி மாஜி பத்திராதிபரும் ஜஸ்டிஸ் பத்திரிகை காரியதரிசியும் ஜஸ்டிஸ் கட்சிக்காக நடத்தப்படும் தெலுங்கு பத்திரிகையாகிய 'சமதரிசினி' பத்திரிகை ஆசிரியரும் ஆகிய மூவர்களே ஆட்சேபித்துப் பேசினர். அப்படிப்பேசியதிலும் சிலவு செய்ய வேண்டும் என்கின்ற கட்சிக்காக அவர்களில் யாராவது ஒரு நியாயமும் சொல்லவேயில்லை. அவர்களில் ஒருவர் நியாயமான சிலவு செய்யலாம் என்றார் மற்றவர் கர்ப்பூரம் மாத்திரம் கொளுத்தலாம் என்றார் இன்னொருவர் இபாவின் சிற்பவேலை அலங்காரத்திற்கு கோயில்களை மீத்து வைக்க வேண்டியிருப்பதால் சிலவு செய்து தான் தீரவேண்டும் என்றார்.

எனவே ஆக்ஷேபித்துப் பேசிய மூன்று கனவான்களுடைய பேச்சிலிருந்தும் இம்மாதிரி விஷயங்களில் ஜஸ்டிஸ் மனப்பான்மை எப்படி இருக்கின்றது என்பதை உணர மட்டும் முடிந்ததே தவிர வேறு சரியான காரணங்கள் ஒன்றும் கண்டு பிடிக்க முடியவே இல்லை.

"அவசியமான செலவைச் செய்ய வேண்டும்" என்றால் என்ன நியமான செலவு என்று கண்டு பிடிக்க கொமிட்டீ எங்கு போய் கண்டு பிடிப்பது. அதை நிர்ணயமாக்க என்ன அவசியமும் ஆதாரமும் இருக்கின்றது. உலக ஜனத்தொகையில் மிக்க அதிகமான பாகத்தை கொண்ட கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் கோவில்களில் கடவுள் வணக்கத்திற்கு என்றும் கடவுளை வணங்கும் போதும் எவ்வளவு பணம் செலவு செய்கின்றார்கள் அல்லது எவ்வளவு பொருமான சாமான் செலவு செய்கின்றார்கள் என்பதை யோசித்தால் இந்த தீர்மானம் எப்படி மக்களுக்கு நாஸ்திகத்தை போதிக்கக் கூடியதாகும் என்பது விளங்காமல் போகாது. அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியின் முயற்சியால் தேவஸ்தானச் சட்டம் நிறைவேறி இன்றைக்கு 3, 4 வருஷங்களாயின. எந்தக் கோவில் செலவுகள் சுருக்கம் செய்யப்பட்டது அல்லது யாதிகாரர்கள் செலவை மட்டுப்படுத்த முடிந்தது. அல்லது கடவுளுக்காக பொதுஜனங்கள் கொடுத்த பணங்களில் எந்தப்பாகம் மீதி செய்யப்பட்டது. வருகின்ற பணம் 'கிரமப்படி' 'முறைப்படி' செலவாகின்றதா என்று பார்க்கின்ற அதிகாரம் தவிர தினம் எத்தனை வேளை பூஜை எத்தனை படி அரிசி எத்தனை விளக்கு எத்தனை எண்ணை எத்தனை பால் விட்டு அபிஷேகம் என்பதை கணித்துப் பார்த்து சரியாய் கொஞ்சமும் குறையாமல் செலவு செய்யப்படுவது தவிர வேறு காரியமோ அதிகாரமோ சுதந்திரமோ அந்தச் சட்டத்தில் இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

இவ்வளவு கோடி ரூபாய்கள் நமது கடவுள்களுக்கென்று நாம் செய்தும் இன்றைய தினம் நமது நாட்டில் கண் ஆஸ்பத்திரி மருத்துவ ஆஸ்பத்திரி போன்ற உயர்தரக் கலாசாலை தீண்டாதார் பள்ளிக்கூடம் அனாதைகள் ரக்ஷண ஆஸ்ரமம் ஆகியவைகள் எல்லாம் முக்கியமாக கடவுளைத் தொழ கோயிலில் ஒரு காசு கூட செலவு செய்யவேண்டியில்லாத மதத்தை சாமியைச் சேர்ந்த மக்களால் அவர்கள் இனத்தாரின் தர்ம பணத்தில் தானே நடைபெறுகின்றது. அன்றியும் நாமும் கூட சற்றும் 'தேசிய சுயமரியாதை' என்பது ஒரு சிறிதுமில்லாது அவைகளில் போய் சிகிச்சை செய்து கொண்டும் படித்துக்கொண்டும் இருந்துவிட்டு நம்முடைய சுவாமிக்கு பூஜைக்கும் வணக்கத்திற்கும் செலவு செய்வதைமாத்திரம் நிறுத்தமுடியாது என்றால் இதில் ஏதாவது அறிவு இருக்கின்றதா என்று கேட்கின்றோம். தவிர 'கற்பூரமாவது பற்றவைக்கவேண்டாமா' என்பது, இதை இந்த மகாநாட்டில் பேசியது ஒரு சிறிது கூட ஞானமில்லாமல் பேசிய வார்த்தைகள் என்றுதான் சொல்ல வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம். இவ்வார்த்தைகள் [illegible] மகாநாடுகளில் பேசுவது ஒரு சமயம் கிராம அவசியமான வார்த்தைகளாயிருக்கலாம். அப்படியின்றி சீர்திருத்தம் பகுத்தறிவு தன்மானம் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட சுயமரியாதை மகாநாட்டில் சாமிக்குக் கற்பூரம் பற்ற வேண்டுமென்றால் இது எவ்வளவு வெட்கக்கேடான காரியம் [illegible] பழமொழி [illegible] பொங்கலோ புளியோதரையோ செலவு செய்தாலாவது சுவாமி [illegible] குருக்கள் சோம்பேறி பார்ப்பானுக்கு ஒரு முடியும் [illegible] ஒரு முடி [illegible] மற்ற அவர்கள் தின்னவும் [illegible] பூத் [illegible] முக்கிலும் வாயிலும் [illegible] ஜப்பான் காரனுக்கும் [illegible] யாருக்கு என்ன லாபம் [illegible] வெளிச்சம் எதற்காக வேண்டும்? [illegible] நாம் குருடர் அல்லவே [illegible] எதற்காக கர்ப்பூர [illegible] அதில் எவ்வளவு கர்ப்பூரம் [illegible] இவற்றை சற்று கவனியாமல் சாமிக்கு கற்பூரம் கூடவேண்டாமா [illegible] என்ன அநியாயம்" [illegible] லாபம். இதில் பகுத்தறிவு [illegible] சீர்திருத்தம் உண்டா? [illegible] கம் உண்டா என்று கேட்கின்றோம். "இந்தியாவில் சிறந்த புண்ணிய பூமி" [illegible] கற்பூரம் [illegible] தண்ணீர் [illegible] தெரு [illegible] யால் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொள்வதை இன்றைக்கும் பார்க்கலாம். அப்படி இருக்க இத்தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களுக்கு அதிலும் பார்ப்பனரல்லாதார் பணம் வீணாகாமல் பார்த்துக் கொள்பவர்களுக்கு, சுவாமிக்கு செலவு செய்ய வேண்டும் என்ற அவசியம் இவ்வளவு பலமாக ஏற்பட்டிருப்பது நமக்கு வேடிக்கையாகத்தான் இருக்கின்றது.

தவிர பழைய ஞாபகச்சின்னத்தைக் காப்பாற்றவாவது சாமி வணக்கமுறையில் பணம் செலவுசெய்யவேண்டும் என்று மகாநாட்டில் மற்றொரு கனவான் சொன்னதுக்கு இன்

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## "இராமனுக்கு சீதை தங்கை"
## "இராவணனுக்கு சீதை மகள்"
## "இராமனுக்கு பல பெண்டாட்டிகள்"

(திரு. ஈ. வெ. இராமசாமி 'ஆனந்தவிகடன்' வருஷ அநுபந்தத்திற்காக எழுதியது)

இராமாயணம் என்பது சூரிய குல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், நூறு கோடிக்கணக்கான சுலோகங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப்போக்கில் பல தெய்வீக காரணங்களால் மறைந்து போய்விட்டனவென்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றைத் திரு. கோவிந்ததாஸ் அவர்கள் வட இந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய "இந்து மதம்" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதை அநுசரித்தே சென்னை மைலாப்பூர் "ராமாயண விலாசம்" என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுரகர்த்தாவாகிய திரு. சி. ஆர். சீனிவாசய்யங்கார் பி. ஏ. என்பவரால் எழுதப்பட்டு 1928-ம் வருஷத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கும் "இதர ராமாயணங்கள்" என்னும் புஸ்தகத்தில் மேல்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. (அப் புஸ்தகத்தின் விலை ரூ. 1) அவையாவன;—ஜைன ராமாயணம், பௌத்த ராமாயணம், யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் என்பவைகளாகும்.

இவற்றுள் யவன ராமாயணம், கிறைஸ்த ராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும் கதைகளில் வரும் பெயரும் மற்ற சில்லரை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த பாஷைக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் மற்ற இரண்டும் அதாவது ஜைன பௌத்த ராமாயணங்கள் பெரிதும் கதைப்போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால் சில்லரை விஷயத்தில் உண்மைகள் மாத்திரம் மாறுபட்டிருக்கின்றன. அதில் ஜைன ராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தகசாலையில் வைக்கப்பட்டிருப்பதாக பதிப்பாசிரியர் எழுதியிருக்கின்றார். அதில் தசரதனை, ராவணன் முதலியவர்களுடைய சந்ததிக் கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளும் சிறிது வித்தியாசப்பட்டாலும் மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக்கொண்டு அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும் அவர்களின் பெயர்கள் 1. அபராஜிதை, 2. சுமத்ரை, 3. கைகேயி, 4. சுப்ரபை என்றும் குறிப்பிட்டு விட்டு கைகேயிக்கு தசரதன் கொடுத்த இரண்டு வரத்தையும் அப்படியே குறித்திருப்பதுடன், அபராஜிதைக்கு ராமன் பிறந்ததாகவும் சுமத்திரைக்கு லக்ஷ்மணன் பிறந்ததாகவும் கைகேயிக்கு பரதன் பிறந்ததாகவும் சுப்ரபைக்கு சத்துருக்னன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுபோலவே சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தான் என்றும், ஆகவே வில்லை வளைத்தே ராமன் சீதையை மணந்தான் என்றும், லக்ஷ்மணனுக்கு 18 பெண்சாதிகள் என்றும், பரதனுக்கு ஜனகனுடைய சகோதரியின் குமாரத்தி கொடுக்கப்பட்டாளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி ராமாயணத்தைப் போலவே இருந்தாலும் சிறு சிறு மாறுதல்களுடன், தபசு செய்ததற்காக சம்பூகன் வதைக்கப்பட்டதும் குறிக்கப்பட்டிருப்பதோடு இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும் அவர்களின் பெயர் 1 சீதை, 2 பிரபாவதி, 3 ரதினிபா, 4 ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பௌத்த ராமாயணத்திலும், தசரதராஜனுக்கு பதினாயிரம் மனைவிகள் என்றும் அவர்களில் மூத்தவளுக்கு ராமன், லக்ஷ்மணன் என்பவர்களான இரண்டு ஆணும் சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும், அடுத்த மனைவிக்கு பரதன் என்கின்ற ஒரு ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும், அரசன் பரதனுக்கு பட்டம் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக்கொடுத்திருந்தான் என்றும், ஆனால் அரசன் அந்தப்படி செய்யாமல் ராமனுக்கு பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும், இளைய மனைவி கட்டாயப்படுத்தினதால் பரதனுக்குப் பட்டம் கொடுத்துவிட்டு ராமன், லக்ஷ்மணன், சீதை ஆகிய சகோதர சகோதரிகளை பரதன் கொன்றுவிடுவான் எனப்பயந்து காட்டுக்கனுப்பிவிட்டான் என்றும் பரதன் தமயனைத் தேடி காட்டுக்குப் போய் ராமனையே பட்டத்தை ஒப்புக்கொள்ளச் சொன்னதாகவும், ராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் நான் நாட்டுக்குத் திரும்பிவர முடியுமென்றும், அதுவரை தனது பாதரக்ஷையையும் மற்ற சகோதர சகோதரிகளையும் அனுப்புபடி கேட்டு வாங்கி அழைத்து வந்ததாகவும் பன்னிரண்டு வருஷமான பின் தசரதன் இறந்து போனதாகவும், பிறகு ராமன் அயோத்திக்கு வந்ததாகவும், வந்தவுடன் ஜனங்கள் ராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய ராமனுக்குக் கலியாணம் செய்வித்து பட்டம் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கின்றது.

இவைகளை மெய்ப்பிக்க திரு. அய்யங்கார், அந்தக் காலத்தில் அண்ணனும் தங்கையும் கல்யாணம் செய்து கொள்ளும் வழக்கம் உண்டு என்றும் எகிப்து தேச ராஜதர்மமே சகோதரியை மணப்பது தான் என்றும் இதை அறிந்து தான் ரிக்வேதம் 10-வது மண்டலத்தில் 10, 12 சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு முன் அவ்வழக்கமிருந்து வந்ததற்கு மேலும் ஆதாரமாக சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் எழுதியிருக்கின்றார். திரு சி. ஆர். சீனிவாசய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த வால்மீகி ராமாயணம் பின் பகுதிக்குறிப்பு 431-ம் பக்கத்தில், சீதை தசரதனுடைய மகள் என்றும், அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம் கொடுத்தார் என்றும் அவள் பூமியில் பட்டால் பூமி இழுத்துக்கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில் விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், தசரதன் இல்லாதபோது ஒரு நாள் சீதை பூமியின் மீது நின்றுவிட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்து போய் விட்டாள் என்றும். பிறகு கொஞ்சகாலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும்போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு அவள் தான் முன் வளர்த்துவந்த சீதை என்று தோன்றவில்லையென்றும், ஆகவே அவளது தமையனாகிய ராமனுக்கே அவளைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டு விட்டு இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும் ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றியும் இதே திரு. சீனிவாசய்யங்கார், 'எவனொருவன் தன்னுடைய தங்கையை மணம் செய்து கொள்ளுகின்றானோ அவன் மனைவியைத் தூக்கிக்கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு' என்று ராவணனுக்கும் ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும் அந்தச்சாபத்தின் பலனாய் ராவணனானவன் ராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்து கொண்ட விஷயம் தெரியாமல் சீதையைத் தூக்கிக் கொண்டு போனதாகவும், அதனாலேயே ராவணன் ராமனால் கொல்லப்பட்டதாகவும், ராவணனுக்கு உண்மையில் ராமன் தன் தங்கையைக் கட்டிக்கொண்டது தெரியாதென்றும் தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்க மாட்டான் என்றும், இந்த உண்மைகள் பார்க்கவ புராணத்தில் இருப்பதாகவும் மேற்கண்ட 431-ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.

மற்றும் இதே திரு. சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே சீதை ராவணன் மகள் என்றும், அவர்கள் பிறந்த காலதோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும், அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டுபோய் எறிந்து விட்டதாகவும், அது ஜனகனது ராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்து

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# கடவுளுக்கு ஆதாரம் பூஜை.

("பிரீ திங்கரை"த் தழுவி)

த. பா. நித்தியானந்தம் எழுதுவது.

கடவுள் உண்டென வைத்துக்கொள்ளுவோம். இந்தக்கொள்கையோ மிகப்பெரிது. கோடிக்கணக்கான ஜனங்கள் கொண்ட கொள்கை. நாமோ தற்போது அதற்குப்புறம்பாயிருக்கவேண்டியிருக்கிறது. இதனால் நாம் அநீதவாதி என் கருதப்படுவது சரி. ஆனால் அந்த விஷயம் வேறு. பலர் முன்பாகத் தனிப்பட்ட பேர் வழியாக நாம் எண்ணப்படலாம். நிற்க,

தற்காலத்தில் கடவுள் என்ற எண்ணம் மனதிற் கொள்ள வேண்டுமானால் ஒரு கடவுள் இருப்பதாக மனதில் நிர்மாணித்துக் கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அதை, அறிவிற்குப் பொருத்தமாயில்லாததை முன்னிட்டுநிர்மாணஞ் செய்யாதிருக்கக் கூடாது. மத சம்பந்தமான சிறந்த முடிவுகளுள் சிலவற்றிற்குத் தெளிவாய்ப் புலப்படக்கூடிய முடிவு யாதொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. மதத்தைப் போற்றுகிறவர்களால் மதத்திற்கு மூலாதாரமாகப் பாவித்துப் போற்றப்படுகிறவற்றிற்கோ, உண்மையான ஆதாரம் ஏதுமில்லை.

அழிக்க முடியாத மதத் தத்துவங்கள் சீர்குலைந்து போகின்றன என்று வைதிகர்கள் ஓலமிடுகிறார்கள். தானே தானாய் நின்றிலங்கும் கடவுளுண்டென நிலை நாட்டுகிறார்கள். ஆனால் இது முழுப்பொய் என நம்பும் மக்களின் தொகை நாளுக்கு நாள் ஓங்கிவளருகிறது. கடவுள் சக்தியினால் வியாதி குணமாகுமென்று நம்புகிறார்களே. அப்படியானால் நோயாளிக்கு மருந்து கொடுக்க வைத்தியரைத் தேடுவானேன்? இக்காலத்தில் மனித அறிவிற்கு எட்டாத விதமாகக் கடவுள் தம் ஆக்கத்தை வெளிப்படுத்துகிறதாக நம்புகிறார்கள். கடவுள் எந்தவிதமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளக் கூடுமென பகுத்தறிவைக் கொண்டும், விஞ்ஞான அறிவைக்கொண்டும் ஆராய்ச்சி செய்து வருபவர்களிடம், வைதீகக்குழுவினர் சென்று நாம் அப்போதைக்கப்போது கூடி முடிவு கட்டும் கொள்கைகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

எனவே, பகுத்தறிவிற்குப் புறம்பாயுள்ள மதத்தை ஏற்றுக்கொள்ளுவோம். ஏனெனில் அந்தக் கடவுளை ஏற்றுக்கொள்ள பகுத்தறிவை ஒதுக்கிவைப்பதைத் தவிர வேறு வழியில்லை. தற்காலத்தியவன் அந்தக் கடவுளை ஏற்றுக்கொண்டால் அதை அனுசரிக்கவேண்டும்.

'கடவுள்' என ஒன்று இருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோமானால், அந்தக் கடவுள் எதற்காக இருக்கிறது என்ற கேள்வி உடனே ஏற்படுகிறது. முன் ஒரு காலத்தில் கடவுள் இருக்கவேண்டியது அவசியம் எனத் தோன்றியது. அவர் உலகத்தை இயங்கும்படிச் செய்தார். கடவுள் தன்மையில்லாததை எல்லாம் தம் மின்னலைக்கொண்டு பறக்கடித்தார். கடவுள் தன்மையுள்ளவர்களை எல்லாம் தக்கபடி அற்புதங்கள் செய்து காப்பாற்றினர். பருவமழையையும் நல்ல அறுவடையும் அளித்தார். பல திறப்பட்ட உயர்வான வேலையை அவர் செய்துவந்தார். உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும் கடவுள் கட்டளையினாலே இயங்குகின்றன எனக்கூறுகின்றனர். இந்தக் கொள்கைப்படி கடவுள் உலகிலுள்ள எல்லாவற்றையும் இயக்குவிக்கிறவர் எனத் தெரிகிறது. ஆனால் அவர் இறந்து போனால் உலகமும் அவரோடு அழிந்து போகும். அப்படியானால் அவர் தொழிலை நடத்துவிக்க வேறொரு கடவுள் உண்டாகவேண்டும். இதில் கடவுள் ஏன் இருக்க வேண்டும் என்னும் கேள்வி விவாதிக்கப்படவில்லை. தான் செய்யவேண்டிய வேலையையவர் செய்தார்.

ஆனால் அவர் செய்து வந்த வேலைகள் அவரை விட்டு ஒன்றன் பின்னொன்றாய் நீங்கின. ஆனால் கொஞ்சகாலமாய் மழைக்காக வருண ஜபம் அதிகமாயில்லை. வருணன் வரம்பிற்கு உட்பட்டுத்தான் மழை வருமென்பது இப்போது ஒப்புக்கொள்ளப்படவில்லை. கடவுள், தன் பக்தர்களுக்கு ஏற்றபடி அற்புதங்கள் செய்வதில்லை என்றும் பக்தர்கள் மடிவது போல் பக்தியில்லாதவர்கள் மடிவதில்லை யென்றும், கோவில்கள் பாழடைவது போல் சூதாடி மடங்கள் பாழடைவதில்லை யென்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நிற்க;

கடவுள் ஒன்று இருப்பதாகவே வைத்துக் கொண்டால் அந்தக் கடவுள் எதைச் சாதிக்க இருக்கிறது? தன் காலத்தை எப்படிக் கழிக்கிறது? இவ்விஷயங்களைப்பற்றி ஆழ்ந்து யோசித்திருக்கிறேன். எனக்குத் தக்க சமாதானம் இதுவரை கிடைக்கவில்லை, ஆனால் இப்போது ஒரு சமாதானம் கிடைத்திருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு ஊர் ஜனங்கள் கோவிலுக்குவருவதில்லை என்று அக்கோவில் பூசாரி அப் பூசாரித்தனம் தனக்கு வேண்டியதில்லை என்றாராம். இது நாட்டில் ஒரு பரபரப்பை உண்டுபண்ணி விட்டது. ஜனங்கள் கோவிலுக்கே போகாது போனால் எல்லாக் கோவில்களையும்பூசாரிகள் மூடிவிடுவார்கள். அந்த நிலைக்குத்தான் வந்து முடியும். ஆனால் கோவில் இல்லாது போகுமா? ஒரு பூசாரியும் ஒரு சிறு குழந்தையும் மட்டும் கோவிலுக்குப் போய் வந்தாலும் போதுமானது. கோவிலின் நோக்கம் இதனால் நிறைவேறியதாகும். இதுவும் ஒரு காரணந்தான்.


ஆகையால் கடவுள் வணங்கப்படுவதற்காகவேயிருக்கிறார். பூசை மூன்றுவகைப்படும் 1. அவர் செய்த நன்மைகளுக்கு நன்றி செலுத்துதல் (2) இனி அவர் செய்யப்போவதற்காக நன்றி செலுத்துதல் (3) அவர் ஒரு பெரியவராயும், வல்லமையும் அறிவும் உள்ளவராயும், இகலோகத்திலும் பரலோகத்திலும் ஒப்புயர்வு அற்றவராயிருப்பதாக அவரைப் போற்றுதல்.

பண்டைக்காலத்திலே, மனிதன் தனக்கு எதெது நன்மையோ தீமையோ செய்தவர்தோ அதை எல்லாம் கடவுளென வணங்கினான். பிறரிடம ஒருநன்மையையெதிர்பார்த்தே அவருக்கு ஒரு நன்மை செய்வது மனித இயற்கை. ஏனென்றால் தனக்கு வேண்டியதைக் குறித்தோ அல்லது தனக்கு நேரிடக்கூடிய தீங்கைநீக்கிக்கொள்வதைக் குறித்தோ தான் பூசையிடுவது. ரோமன் கத்தோலிக்கர் விக்கிரக வணக்கமும் இதே கொள்கையைத் தான் வலியுறுத்துகிறது.

இயற்கை எனும் தாய் அதன் செய்கைகளுக்காகப் போற்றப்படுகிறது. இன்னும் வேண்டியவற்றைச் செய்யும்படி வேண்டப்படுகிறது. இவைகளை முன்னிட்டு ஷை கடவுளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. வஞ்சக நெஞ்சமுள்ள காட்டுமிராண்டியுங்கூடத் தன் தலைவனிடத்தில் இம்மாதிரி தந்திரங்களைத்தான் அனுசரிக்கிறான். அவன் தன் தலைவனைப்பார்த்து "மகாராஜாதிராஜப்பிரபுவே! தங்களுக்கிணை யாருண்டு? தங்கள் முகங்கடுத்தால் உலக முழுதுமே கலங்காதா! தங்கள் புன்முறுவலைக் கண்டு உலகமே மகிழாதா? தாங்கள்கோபங் கொண்டால் பகைவா நடுங்காரா! தாங்கள் நினைத்தால் அவர்களை ஹதம் செய்து விடுவீர்களே! தங்கள் அறிவின் விசாலமும் நீதியின் திறனும் ஒப்புயர்வு இல்லாததல்லவா!" என வாழ்த்துகிறான். தந்திரசாலி ஒருவன் இவ்வாறு சொன்னால், அது முழு இச்சகமேயாகும். ஆனால் கலக்கமற்ற மனதையுடையவன் இவ்வாறு கூறினால் அவன் மனமகிழ்ச்சியினால் அவனுக்குண்டான உணர்ச்சியைக் கூறுவதாகும். அவ்வாறுபக்திமான் எனப்படுபவர்கள் ஷை கடவுளை அளவு கடந்து முகஸ்துதி செய்து அவரை அவமதிக்கிறார்கள். இதைத்தான் கடவுளும் விரும்புகிறார். இந்த விதமான மதசம்பந்தமான உணர்ச்சியை முன்னிட்டுத்தான் கோவில்கள் இருக்கின்றன. இத்தனைகோவில்களும் இத்தனைப் பூசாரிகளும் இல்லாது போனால், ஒருக்கால், இந்தக் காலத்தில் கடவுளை வணங்க வேண்டும் என்னும் உணர்ச்சியே மறைந்தே போனாலும் போகலாம். அப்படியானால் கடவுளுக்கு என்னநேரிடும்? மனிதன் மனதில் கடவுள் எண்ணம்மட்டும்தோன்றலாம். கடவுள் உண்டு என்ற எண்ணமே மனதில் நினைக்காதிருந்தால் கடவுளே ஒருக்கால் மறைந்து போனாலும் போகலாம்.

நவராத்திரி கொலுவில் சில இந்துமதக் கோவில்களில் பேயாடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஏன்? பேய் பிசாசு உண்டு என்னும் எண்ணம் அழிந்து போகாது காப்பாற்றுவதற்காகத்தான், ஜனங்கள் பேய் பிசாசுகள் உண்டு என்று நம்பாததனால் நாளுக்கு நாள் அந்த எண்ணமே சிதைந்து வருகிறது. நவீன உணர்ச்சியெழாத சிறுவர்கள் மட்டும் பேய் பிசாசுகள் உண்டென நம்புகிறார்கள். தூபதீப நிவேதனத்தைக் கொண்டே கடவுளைப் பூஜிக்கவேண்டுமென ஒரு வகுப்பார் கருதுகிறார்கள். இதுவே கோவில்களில் வழிபடும் முறை என வகுத்திருக்கிறார்கள். அவர்கள் தாம் தொழுது வரும்வரையிலும் அந்தக் கடவுள் நிறைந்து கொழுத்த பசையுள்ளதாக இருப்பதாகவும்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க).



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு மாசி-மீ 20-உ.

## செங்கல்பட்டு மகாநாட்டின் தீர்மானங்கள்.

(II)

ஜாதி வகுப்பு வித்தியாசத்தைக் காட்டும் பட்டங்களையும் சமய வித்தியாசத்தைக் காட்டும் குறிகளையும் விட்டு விட வேண்டும் என்று செய்த தீர்மானம் நாட்டின் ஒற்றுமைக்கு மிகுதியும் அத்தியாவசியமானது என்பதைப் பற்றி முன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

இத்தீர்மானத்தில் பொறுமை கொண்ட சில விஷமக்காரர்கள் வகுப்புப் பட்டம் நீக்க வேண்டும் என்கின்றவர்கள் வகுப்பு மகாநாடுகளில் கலந்து கொள்ளலாமா என்கின்ற ஒரு பிரசினையை கிளப்பி விட்டிருக்கின்றார்கள். இதற்கு நாம் சொல்லும் சமாதானம் என்னவென்றால் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்பு மகாநாடுகள் கூட்டி, அவற்றில் இவ்விதத் தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி அவற்றை முதலில் தங்கள் தங்கள் வகுப்புகள் என்பவைகளுக்குள் அமுலுக்கு கொண்டு வருவதன் மூலம் வகுப்பு வித்தியாசங்களை ஒழியுங்கள் என்று தான் கேட்கின்றோம். அதற்காகத்தான் வகுப்பு மகாநாடுகள் கூட்டுங்கள் என்கின்றோமே ஒழிய வேறில்லை. உதாரணமாக ஒரு வாணிய வைசிய மகாநாட்டில் நாம் பேசும் போது அவர்களுடைய பூணூலை எடுத்து விடும்படியும் தங்களை வைசியர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டாம் என்றே கேட்டுக் கொண்டோம். அது போலவே நாடார் க்ஷத்திரிய வகுப்பார் கூட்டத்தில் பேசும் போதும் தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டாம் என்றும் பூணூலை எடுத்து விடும்படியும் பேசினோம்.

அது போலவே [illegible]புடுமார்கள் மகாநாட்டில் பேசும்போதும் தங்களை க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொள்வதை விட்டு விடும்படியே கேட்டுக் கொண்டோம். இம்மாதிரி சிறிதாவது விட்டு விடவும் செய்தோம். ஆதலால் வகுப்புப்பிரிவுகள் எத்தனை உண்டோ அத்தனை வகுப்பும் மகாநாடுகள் கூட்டி வித்தியாசங்களை ஒழிக்க தீர்மானங்கள் செய்து கொள்ளாவிட்டால் எப்படி இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் போய்ப்புகுந்து வகுப்பு நோயைத் தீர்க்க முடியும் என்பது நமக்கு விளங்காது. மற்றும் இப்போது ஆதிதிராவிட மகாநாடுகள் கூடுவதால் எவ்வளவு தூரம் அச்சமூகத்திற்கு உணர்ச்சி வந்து அவைகள் முன்னேற இடமேற்பட்டிருக்கின்றது என்பதை கவனித்தால் வகுப்பு மகாநாட்டின் அவசியம் விளங்கும். ஒரு பெரும் சமூகம் ஒற்றுமையும் சீர்திருத்தமும் பெறவேண்டுமானால் அதிலுள்ள பிரிவுகளான ஒவ்வொரு சிறு சமூகமும் தங்களுக்குள் முதலில் ஒற்றுமையையும் சீர்திருத்தத்தையும் பெற்றாகவேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த உண்மை உலகத்திலுள்ள எந்த யோக்கியனுக்கும் விளங்கியே தீரும்.

உதாரணமாக தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டப்படாமல் இருந்திருக்குமானால் பார்ப்பனர்களின் கொடுமை நாடு அறிந்து, அதிலிருந்து விடுதலையடைய மார்க்கம் ஏற்பட்டிருக்க முடிந்தே இருக்காது என்று சொல்லுவோம், அன்றியும் வகுப்பு மகாநாடுகள் அடிக்கடி கூடுவதால் தாங்கள் மற்ற வகுப்பார்களால் அடையும் துன்பமும் அதிலிருந்து விடுபட்டு மற்ற வகுப்பார்களும் தாங்களும் ஒற்றுமையாயிருக்க மார்க்கமும் அவசியமும் தானாகவே ஏற்பட்டு விடும் எனவே வகுப்பு வித்தியாசங்களால் வயிறுவளர்க்கலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கும் சுயநலச்சோம்பேரிகளைத்தவிர பொதுநலத்தில் கருத்துள்ள மற்றயாவருக்கும் வகுப்புவித்தியாசங்களை ஒழித்து ஒற்றுமைப்பட வகுப்பு மகாநாடுகள் கூட்டப்படுவது எந்த விதத்திலும் ஆபத்தாய் தோன்றாது.

ஜாதி பேதத்தை ஆதரிக்கின்ற மதம் வேதம் சாஸ்திரம் புராணம் ஆகியவைகளைப் பின்பற்றக்கூடாது என்பது.

இந்தத் தீர்மானத்தை எந்த விதமான நிர்மாணத்தைக் கொண்டும் யாரும் எதிர்க்க முடியாதானாலும் சமயத்தின் பேராலும்வேத சாஸ்திர புராணத்தின் பேராலும் தங்களது நித்திய வயிறு வளர்ப்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு இத்தீர்மானம் ஒருநாளும் திருப்தியை அளிக்காது என்பதோடு அவர்களது கூச்சல் விஷமப் பிரசாரம் இரகசியமாய் நடந்து தான் தீரும்.

இத்தீர்மானத்தின் கருத்துப்படிப் பார்த்தால் முக்கியமாக இந்து மதக் கொள்கைகளையும் அவற்றின் ஆதாரங்களையும் பின்பற்றக்கூடாது என்பதாகக்காணப்படுகின்றது என்று தான் ஒவ்வொருவருக்கும் தோன்றும். ஏனெனில் உலகத்திலுள்ள எல்லா முக்கிய மதங்களை விட இந்து மதம் என்பதிலும் அதன் ஆதாரங்கள் என்பதான வேதசாஸ்திர புராணங்களில் தான் ஜாதிவகுப்பு பிரிவும் பிறவியில் உயர்வு உண்டு என்பதையும் அதிகமாய் வலியுறுத்தப்படுகின்றது. ஆதலால் இத்தீர்மானம் மிகுதியும் இவற்றை குறித்து சொல்வதாக நினைப்பதில் அதிசயமில்லை.

ஆனால் நம்மைப்பொறுத்தவரை உண்மையில் இந்துமதம் என்பதாக ஒருமதமே இல்லை என்றும், இருப்பதாக கருதிக்கொண்டிருப்பதும் அதன் ஆதாரங்கள் என்றுசொல்லப்படுவதும் ஒரு சிலருடைய சுயநலத்தாலும் நமதுமக்களுடைய அறியாமையினாலும் வழங்கிவரும் ஒருவெறும் மயக்கஉணர்ச்சியேதவிர வேறில்லைஎன்றும், அம்மயக்க உணர்ச்சி ஒழியவே இந்துமதமும் அதன் ஆதாரங்களும் ஒழியவேண்டுமென்கின்றோமே ஒழிய வேறில்லை.

உதாரணமாக இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லைஎன்று சொல்லிவந்திருக்கும் புஸ்தகங்களுக்கும் விஷயங்களுக்கும் இதுவரை யாரும்பதில் சொன்னவர்களே கிடையாது. ஞானசூரியன் புஸ்தகத்தில் காணப்படுவதுபோல ஒருநாட்டின் இழிமக்களுக்கு அந்நாட்டு பாஷையில் சொல்லப்பட்ட ஒரு இழிவானபெயரே இந்துஎன்பது.

அப்பெயர் பெரும்பாலும் மகமதியர்களால் தங்கள் மதஸ்தர்கள் அல்லது தங்கள் நாட்டவர்கள் அல்லாத இந்தியா நாட்டவர்களுக்கு அளிக்கப்பட்டது. எப்படி ஐரோப்பியர்கள்நம்மைச் சுதேசிகள்என்று கூப்பிடுகிறார்களோ அதுபோலவே மகமதியர்கள் நம்மைச்சுதேசிகள் என்று கூப்பிடுவதற்கு பதிலாக இந்தியன் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் சொல்லுவதுபோல இந்தி, அரபி, உருது முதலிய பாஷைகளில் இந்து என்று சொல்லிஅழைத்தார்கள் இந்தநிலையில்இந்திய மக்கள்எல்லோரையும் குறிப்பிடவேறுபெயர் சமயத்தின்பேரிலோ நாட்டின்பேரிலோ ஜாதியின் பேரிலோ ஒருகுறிப்பும் இல்லாதிருந்ததால்இந்துஎன்கின்ற பெயரே எல்லோரையும் சேர்ப்பதற்கு ஒருபொதுப்பெயராகவும் ஏற்பட்டதோடு ஆரியர்கள் கொள்கைகளுக்கே இந்துசமயம் என்னும் பெயர் தரப்பட்டு அது இந்தியர்கள் எல்லோர்கள் தலையிலுமே சுமத்தப்பட்டுவிட்டது. உதாரணமாக இந்துமதம் என்கின்றவார்த்தை உச்சரிப்புகூட சுமார் ஒரு 400, 500 வருஷங்களுக்கு முன்னால் இருந்ததாக எண்ணுவதற்கு ஒரு ஆதாரத்தையும் காணோம். சைவம் என்கின்றபெயரும் சிவன் என்றால் அன்பு என்கிற வியாக்கியானமும்கூட ஆரியக்கொள்கைகளை சிறப்பாகவே ஆபாசங்களையும் கேள்வி கொடுமைகளையும்முறையே வெளியாக்கியும் ஒழிக்கவும் வந்த புத்த இயக்கத்தை எதிர்த்து அவரது கொள்கையை ஒழிக்கவே சைவம் என்பதாக ஒன்று கற்பிக்கப்பட்டதே தவிர மற்றப்படி அச்சைவம் என்பதற்கும் அதன் கொள்கைகளும் அதில்காணப்படும் பலவேறுகடவுள்களுக்கும் தமிழ்நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்வித சம்பந்தமும் இருப்பதற்கோ இதுவரையெவ்வித ஆதாரமும் வெளிப்படுத்தப்படவில்லை. நாளாகநாளாக சைவ ஆரியக்கொள்கையான சமயம் தமிழ்மக்களுக்குப் பொருத்தமில்லாமல் போவதை அறிந்த சில தமிழர்கள் ஆரிய சைவ சமயம் என்பது வேறு தமிழ சைவ சமயம் என்பது வேறு என்று பிரித்து ஆரியக்கொள்கைகளை கண்டித்து ஒதுக்கி அதற்கு பதில்சுத்தமிழ் மக்களுக்கு பொருத்தமானது என்பதாக சிலவற்றை தாங்களே

## தென்னாப்பிரிக்கா ஏஜெண்டு ஸர் கே. வி. ரெட்டி அவர்களுக்கு நல் வரவேற்பு.

தர்பன் (23-1-29) புதன்கிழமை 9-30 மணிக்கு "S. S." ரோவர் என்னும் கப்பலில், சர் ரெட்டி துறைமுகம் சேர்ந்ததும், கௌரவசாஸ்திரியும், காரியதரிசிகளும்கப்பலுள் எதிர்சென்று வந்தனோபசார நல்வரவு கூறினர். பெருந்திரளான காங்கிரஸ் தலைவர்களும், வெள்ளையஜனசமூகத் தலைவர்களும், கப்பலில் சூழ்ந்திருந்தனர். ஸர். ரெட்டியவர்கள் கரையேறினதும், கரகோஷத்தினிடையே பூமாலைச் சூட்டி மோட்டாரில் ஏற்றிச் சென்றனர்.

அன்றிரவு ரெட்டால் இந்தியன் காங்கிரஸ் ஆதரவின் கீழ் மாலை 8 மணிக்கு நகர மண்டபத்தில், புதிய பொது ஏஜெண்டு அவர்களின் நல்வரவேற்பும், பழைய பொது ஏஜெண்டு கௌரவசாஸ்திரி அவர்களுக்கு பிரிவு உபசார கூட்டமும்நடைபெற்றது. அவ்வமயம் நகரதிபதித்தலைவர்களும் மற்றும் வெள்ளையரும், இந்தியருமாகஜனத்திரள் கணக்கிடுவதற்கின்றி நிரம்பி நின்றனர். இந்தியர் சார்பாக காங்கிரஸ்தலைவரும் வெள்ளையர் சார்பாக நகரத் தலைவரும், ஸர். ரெட்டியவர்களுக்கு நல்வரவும், கௌரவ சாஸ்திரியவர்களுக்கு பிரிவுபசாரப் பத்திரமும் வெள்ளித்தட்டில் வரையப்பட்டு காங்கிரஸாரால் அளிக்கப்பட்டது.

கரகோஷத்தினிடையே ஸர் ரெட்டி கூறியதின் சுருக்கமாவது:—

கௌரவ சாஸ்திரி அவர்களால் அஸ்திவாரமிட்ட விஷயங்கள் யாவும் எளிதில் முடிப்பேனென்ப துண்மையன்றென்றும் ஒவ்வொருவருடைய விஷயங்களைக் கற்றுத் தெரிந்து அவர்களுக்கு நேரிடும் இடுக்கண்களை நல்லெண்ணத்துடன் எவ்விதத்தும் சாதிக்கக்கூடும் என்றும், அவை ஒருவருடைய நன்மைக்காகவல்ல, பலருடைய நன்மையைக்கருதியே யாகுமென்றும் தென்னாப்பிரிக்கா விஷயத்தில், உடன்படிக்கைப்படி தன்னுடைய தொழில் வெற்றி பெற பலருடைய கூட்டுழைப்பும், பிரஸ் உதவியும் அத்தியாவசியம் என்றும், என்னுடைய அரசு முறையோ தென்னாப்பிரிக்கா ஆளுகைத் தலைவருக்கும் தனது ஜனசமூகப்பிரதிநிதிக்கும் நட்புரிமையோடிருக்கு மென்றும் நீண்ட நேரம் பேசியமர்ந்தார்.

கௌரவ சாஸ்திரியவர்கள் எனது பிரயாணத்தை முன்னிட்டு கிலேசம் வேண்டாம் என்றும் தான் விட்ட குறையை சர் ரெட்டியார் மீசுரமாக முடிவு செய்வாரென்றும் இனிவரும் விஷயங்கள் இடையூறின்றி சித்தி பெறுமென்றும் தம்முடைய சர்வீஸ் காலவரையில் உபபலமாக விருந்த வெள்ளையர், இந்தியருக்கு நன்றி செலுத்தியும், இனியேனும் பல சபைகள் ஒன்று கூடி ஒற்றுமையுடன் கூடினால் சகலமும் சித்தி பெறுமென விரித்துரைத்தமர்ந்தனர்,

சர் ரெட்டி 31-1-29 ல் பார்லியமெண்ட் சட்ட சபைத்தலைவர்களைச் சந்திக்க கேப்மாகாணம் செல்கிறார்,

ரெட்டால் நிருபர் அ, நாதமுனியர்,

---

நினைத்து வேறு சில கொள்கைகளையும் வியாக்கியானங்களையும் புகுத்தித்தமிழ்ச்சிவன் தமிழ் வேதம், தமிழ்க்கடவுள் என்பதாக வெள்ளரிக்காய்க்கு பூண்போடுவது போல் இழுத்துப்பிடித்துக்கொண்டு வருகின்றார்கள். அன்றியும் சைவ சமயத்திற்கு ஜாதி மத வகுப்பு பேதங்கள்கிடையாதென்று சொல்லி சமரசத்தைப்பற்றி பேசுவதிலும் குறைவில்லை, ஆனால் உட் புகுந்து பார்த்தால் சமயாச்சாரிகள் எல்லோருக்கும் ஜாதி உண்டு. இது மாத்திரமல்ல, சைவக் கடவுள்கள் எடுத்த மனித ரூபங்கள் எல்லாவற்றிற்கும் ஜாதி உண்டு, இதுமாத்திரமல்ல, சைவ புராணங்கள் எல்லாவற்றிலும் அவற்றை செய்தவர்கள் செய்யப்பட்டவர்கள் உள்பட ஜாதி உண்டு. எனவே சைவசமயம் ஜாதிகள் ஏற்பட்டதற்கு பின்பு உண்டானதென்றும் அதுவும் ஜாதிமத பேதங்களை ஒழிக்கப்புறப்பட்ட பௌத்த சமண கொள்கைகளுக்குப் பின் உண்டானதென்றும் சொல்லித்தீரவேண்டியிருக்கின்றது. அதுபோலவே வைணவ சமயமென்பதும். அதுபோலவே ஆரியக் கொள்கைகள் நாட்டில் பெரும்பாலோரால் வெறுக்கப்பட்ட காலத்தில் அதனுடைய அடிப்படைகளை மாத்திரம் நிறுத்திக்கொண்டு சற்று திருத்தப்பட்ட கொள்கைகளை வைத்து வெளியாக்கப்பட்ட சமயமாகும். ஆனாலும் அதுவும் வார்த்தை அளவில் சில நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் வைணவப் புராணங்களும் கடவுள்களும் ஆச்சாரியார்களும் ஆழ்வார்களும் சகலமும் ஜாதி வித்தியாசம் கற்பிக்கக்கூடியதாகவே தான் இருந்து வருகின்றது.

இச்சமயத்தைச் சேர்ந்த சில பெரியார்கள் [illegible] மாத்திரம் ஜாதிவித்தியாசமில்லை என்று சொன்னதாகக் காணப்பட்டாலும் மற்றும் பல நிபந்தனைகள் சொல்லப்பட்டிருப்பதையும் காணாமல் இருக்கமுடியாது. எனவே ஜாதி வித்தியாசம இயற்கை என்பதும் அதை ஒழிப்பதற்கு நிபந்தனைகள் வேண்டியிருப்பதால் அவ்விரு சமயங்களும் சமரசத்துக்கு [illegible] என்றும் விளங்குகின்றது,

---

## பெண் தேவை.

24 வயதும் நாகரிகமும், அந்தஸ்தும் உள்ள பார்ப்பனரல்லாத வாலிப ரொருவருக்கு 17 வயதுக்குக்கீழ்பட்டதும், லக்ஷணமுள்ளதும் பார்ப்பனரல்லாத பணக்கார குடும்பத்தைச் சேர்ந்ததுமான ஒரு பெண் தேவை. அப்பெண் உயர்தரப் படிப்பு முக்கியமாக வடமொழி படிக்கப் பிரியமுள்ளதாய் அல்லது குறைந்தது ஸ்கூல் பைனல் வகுப்பு வரையிலாவது படித்ததாய் இருக்க வேண்டும் திருமணம் பௌத்த முறைப்படி செய்யப்படும் தபால் போகுவரத்து ரகஸியம் போட்டோ படத்துடன் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

"K"
C/o. பத்திராதிபர்.
"குடி அரசு" ஈரோடு.

---

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1927-வரு O. S. No. 506.
1929-வரு E. P. R. No. 52.

கருப்ப மூப்பன்—வாதி.

திருமக் கவுண்டன் 1, நல்லாக் கவுண்டன் 2, குப்ப கவுண்டன் 3, அங்கண செட்டியார் பிரதிவாதிகள்.

ஷை நெம்பர் 2ம் பிரதிவாதியாகிய நல்லாக் கவுண்டனுக்கு வாதி வக்கீல் ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் தெரிவிப்பதாவது:—

ஷை நெம்பரில் பிரதிவாதிகளின் சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டுவர வேணுமாய் வாதி மனு தாக்கல் செய்து இஸ்தியாரில் கண்ட ஷாத்துக்களை நிர்ணயிப்பதற்காக 22—3—29 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் வந்து ஆஜராகி ஆக்ஷேபணை தெரிவித்துக் கொள்ளாவிடில் ஒரு கக்ஷியாய் தீர்மானிக்கப்படுமென்பதை தெரியப்படுத்தியிருக்கிறேன்,

ஈரோடு, 2-3-29. } ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், வாதி வக்கீல்.

---

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

O. S. 724-21
E. P. R. 1884-28
E. A. 225-29

ல. கிருஷ்ணப்ப கவுண்டன். வாதி.

ஈரோடு தாலூகா புஞ்சை லக்காபுரத்திலிருக்கும் வீரபோயன் மகன் ராமபோயன் பிரதிவாதி.

இதனால் ஷை பிரதிவாதிக்கு தெரிவிக்கிறதென்னவென்றால்:—

ஷை நெம்பரில் இஸ்தியாரின் ஷாத்துக்களை நிர்ணயிக்க 5-3-29 வாய்தா தரப்பட்டிருக்கிறபடியால் நீர் நேராகவாவது வக்கீல் மூலமாயாவது ஆஜராய் ஆக்ஷேபணை தெரிவித்துக்கொள்ளாவிடில் எக்ஸ்பார்ட்டி செய்ய கோரி மேல் நடவடிக்கை நடத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்திருக்கிறது.

T. S. நாராயணய்யங்கார், வாதி வக்கீல்.

---

## ஏல நோட்டீஸ்.

1929-ம் வருஷம் மார்ச்சு மாதம் 12-ந்தேதி சென்னிமலை வாரச் சந்தைப்பேட்டையை நாளது 1929-30 வருஷத்துக்கு சென்னிமலையூனியன் போர்டாபீஸில் ஷை பிரசிடெண்டவர்களால் ஏலத்தில்விடப்படும். ஏல நிபந்தனைகளை யூனியன் போர்டாபீஸில் பார்த்துக்கொள்ளலாம்.

சென்னிமலை யூனியன் போர்டாபீஸ். } மு. பழனியப்ப முதலி, பிரஸிடெண்டு.

# இஸ்லாமும் சுயமரியாதை இயக்கமும்

சென்ற 17, 18-ந் தேதிகளில் கூடிய செங்கற்பட்டு மகாநாட்டின் போது பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை இயக்கத்தின் சார்பான பல தீர்மானங்கள் நிறைவேறின வென்பதைத் தாங்களெல்லீரும் நன்கறிந்து கொண்டிருப்பீர்கள். பார்ப்பனரல்லாதாரெல்லோரும் தத்தம் பகுத்தறிவைச் செவ்வனே உபயோகப்படுத்திப் பார்த்துப் பார்த்துப் பார்ப்பனரின் புரோகித ஆட்சியினின்று விடுபடவேண்டுமென்பதே, அன்னாரின் முக்கிய நோக்கமாகப் பத்துப் பன்னிரண்டாண்டுகளாகவேயிருந்துவந்திருக்கிறது. ஆயினும் இவ்வியக்கத்தின் தீவிர உணர்ச்சியானது சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகத் தாம் ஈ. வெ. ராமசாமி அவர்களால் நன்கு நந்தென்னாட்டின் கண் கிளர்ச்சி செய்யப்பட்டு வந்து, இது போழ்து செங்கற்பட்டில் முதலாவது தமிழ் நாட்டுச்சுயமரியாதை மகாநாடாகத் தழைத்துப் பழுத்துத் தனக்குரிய செங்கனியையும் தந்து நிற்கின்றது. குருட்டு நம்பிக்கை, மௌட்டியக் கொள்கை, மூடப்பழக்க வழக்கங்கள், பௌராணிகப் புளுகுகள், புரோகிதரின் கட்டுப்பாடு ஆகிய சங்கடங்களையுடைத்து விடுபட வேண்டுமென்பதே அவ்வியக்கத்தின் மூலக்கொள்கையாகும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, மனிதனாகப் பிறந்தவன் தனக்குச் சொந்தமாயுள்ள பகுத்தறிவை நன்கு உபயோகப்படுத்திக் கடவுளால் தனக்குக் காட்டப்பட்டுள்ள நன்னெறியின் வழியே ஒழுகித் தீரவேண்டுமல்லாது மற்றான் கையில் தன்னையும், தன் மனைவி மக்களையும், தங்களெல்லோருக்குமுரிய உயரிய பகுத்தறிவையும் அடிமைத்தனத்துக்காளாக்கி விட்டுக் கேவலம் மிருகப் பிராயமாயிருந்து கொண்டு இத்தாரணியின்மீது உயிர்வாழ்ந்து வருவதென்பது சுயமரியாதை யன்றென்பதே அவர்களுடைய ஆழிய அஸ்திவார நோக்கமாகும். இது காரணம் பற்றியே சுயமரியாதை வாழ்வுதான் சுயராஜ்யவாழ்வென்று அன்னார் கூறுகின்றனர். இத்தகைய புத்துணர்ச்சி நம் பார்ப்பனரல்லாத இந்து சகோதரரின்பால் காணப்படுவதை யாம் பேருவகையுடன் வரவேற்கின்றோம். ஏனெனின், தனக்குரிய பகுத்தறிவின் காரணத்தால் தேவர்களினும் மேலான நிலைமையை அடையவேண்டியவனாயுள்ள இம்மானிடன் அப்பகுத்தறிவை உபயோகித்துப் பரீக்ஷித்துப் பார்க்கத் துணியாது அதைப் பிறர் வயம் அடிமைப்பட்டுக்கிடக்குமாறு விட்டுவிடுவானாயின், உடனே அவன் கேவலம் மிருகத்தினும் கீழானவனாய் மாறி விடுகிறான். அந்தோ பரிதாபம்!

இத்தன்மைத்தாய உத்வேக உணர்ச்சியானது யாண்டு எம் முஸ்லிம் பொது மக்களுக்கும் உதயமாகப் போகின்றதோ? யாமறிகிலேம். அவரவரும் தத்தம் சுயமரியாதையை உபயோகப்படுத்திக் கொள்வான் வேண்டி அச்சமூகத்தாரனைவரும் முனைந்து முன்னணியில் நிற்கின்றனர். ஆனால் நந்தென்னாட்டு முஸ்லிம் யுவர்களுக்கு இத்தகைய புத்துணர்ச்சி எப்பொழுது தோன்றுமென்பதை ஆண்டவனொருவனே அறியக் கடவன். “இளைஞர்காள்! பௌராணிகப் புளுகர்களின் மாயவலையுள் வீழ்ந்து விடாதீர்கள். நுங்கள் பகுத்தறிவை நீங்களே செம்மை செய்து சீர்தூக்கிப் பார்ப்பீர்களாக” என்று யாம் அறிவுறுத்தப்புகுவோமாயின், உடனே நம்யுவர்கள் அந்தப்புரோகிதக் குழாத்தினரிடம் ஓடி, “ஹஜரத்! தா. இ. பத்திரிகையில் தாவூத்ஷா இப்படிச் சொல்லுகிறானே, இது வாஸ்தவந்தானா?” என்று வினவப் புகுகின்றனர். இதைக் கேட்டவுடன் அந்தப் புரோகிதச் சாமியார், “நஊது பில்லாஹி மின்ஹா! அந்தப் பேப்பரைக் கையாலுந் தொடாதீர்; கண்ணாலும் பாராதீர். இன்றேல் ஈமான் போய்விடும். அதனால் அவன் காபிராய் விட்டான், இஸ்லாத்துக்கும் பகுத்தறிவுக்கும் என்ன சம்பந்தமுளது?” என்று விடையிறுத்து நம் இளைஞரின் மூளைக்கு முத்திரையிட்டு விடுகின்றனர்.

இவ்வண்ணமாகவே மூரீது கொடுக்கும் மூடாசிக்கையைப் பற்றியும், தர்காவை வணங்கும் தாழ்மாருன ஷிர்க்கைப்பற்றியும், பஞ்சாவை வணங்கும் பலவகை விக்கிரகத் தொழும்பைப்பற்றியும் யாம் கண்டிக்குங்கால் தோறெல்லாம் நஞ்சோதர சோதரிகள் அவ்வவ் தொழிலுக்குரிய மஷாயிகு, முஜாவர், பச்சை சட்டை முதலியோரிடமே சென்று முறையிட்டு மெய்தானோ வென்று கேட்கத் தலைப்படுகின்றனர். மேற்கூறிய இழுக்கான தொழில்களையே தம் வயிற்றுப் பிழைப்பாகக்கொண்டு திரியும் அன்னார் என்னவிதமான சமாதானத்தைக் கூறுதல் கூடுமென்று தாங்களெல்லீரும் எதிர் பார்க்கின்றீர்கள்? ஆண்டவன் நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்து மேலான வற்றிற் கெல்லாம் மிக மேலான சிருஷ்டியாய்ச் சமைத்து வைத்திருக்குங்கால், நாம் ஏன் அப்பகுத்தறிவைச் செவ்வனே உபயோகப்படுத்த எத்தனிக்காது கீழான வற்றிற் கெல்லாம் கீழான படைப்பினங்களாக மாறிவிடுகின்றோமென்பதற்குத் தான் தக்க காரணம் எமக்குப்புலப்படுவதில்லை. இதனால் நாம் நமது சுயமரியாதையை யிழந்து பிறர் வயம் கேவலம் ஆட்டு மந்தைகளே போல் அடிமைப்பட்டு விடுகின்றோம்.

இந்துப் பார்ப்பனரல்லாதார் விழித்துக் கொண்டனர்; ஆனால், முஸ்லீம் பார்ப்பனரல்லாதார் இன்னமும் கண்விழிக்கவில்லை. ஹிந்துப் பார்ப்பனரின் புரோகித ஆட்சி ஒழிந்து வருகின்றது; ஆனால் முஸ்லிம் பார்ப்பனரின் புரோகித ஆட்சி இன்னமும் ஒழியத் தலைப்படவில்லை. இறைவனே! இதைக் களைய என்று நீ எங்களை விட்டு அப்புறம் களைந்தெறிவையோ? அறிகிலேம். இவ்வாறு நம்முஸ்லிம் பொதுமக்கள் இஸ்லாமியப் பார்ப்பனரிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு இவர்களுடைய கல்வியின்மையன்றோ முக்கிய மூலகாரணமாய் இதுகாலை விளங்காநின்றது? எனவே, இளைஞர்களாகிய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தக்க கல்வியை யூட்டத்தலைப்படுவோமாயின், அதன் பின்னர் இவர்கள்பாலுள்ள பகுத்தறிவானது செவ்வனே பிரகாசிக்கத் துணிந்துவிடு மென்பது திண்ணம். கல்வியறிவில்லாததே இவர்களுடைய பகுத்தறிவைத் துருப்பிடிக்குமாறு செய்து வைத்திருக்கின்றது. ஆதலின், கல்விதான் எல்லா விதமான மம்மரையும் அறுக்கும் மருந்தாக அமைந்துள்ள தென்பது சத்தியம். கல்வியின்றேல் பகுத்தறிவென்பதில்லை. பகுத்தறிவின்றேல் சுயமரியாதை யில்லை. சுயமரியாதையின்றேல் அதன்பின் மனிதப் பிறவியால் ஒன்றும் பயனில்லை யென்றே யாம் கூறத்துணிவோம்.

எனவே, இளைஞர்காள்! கல்வியைக்கடைப்பிடிப்பீர்களாக. கல்வியைக்கடைப்பிடித்துப்பகுத்தறிவை வளர்ப்பீர்களாக, பகுத்தறிவை வளர்த்துச் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வீர்களாக. சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வீர்களேல் சுயராஜ்யம் பெறுவீர்கள். இதுதான் மானுஷீக தர்மம். இதுதான் விடுதலை. எனவே இதுதான் சுயராஜ்யம். இதுதான் விமோசனம். இதுதான் வீடு.

---

# மறைந்தார்.

நமது சுயமரியாதை வீரர்களுள் ஒருவரான மதுரை திரு. எஸ். கே. திருமகிழ் மாறன் அவர்களின் தமையனாரும் கட்டுறவு இலாக்காடிப்டிரிஜிஸ்தாராயிருந்துவந்த திரு. கே. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்கள் 14—2—29-ல் இம்மண்ணுலகை நீத்தாரெனக் கேள்வியுற்று வருந்துகிறோம்.

அவர்கள் குடும்பத்தாருக்கு எம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கொண்டு வரப்பட்டதாகவும் அதை ஜனகன் கண்டெடுத்து வளர்த்து ராமனுக்குக் கொடுத்ததாகவும், ராமனும் சீதையும் வனத்திலிருக்கும்போது ராவணன் சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து விட்டதாகவும், குறிப்பிட்டு விட்டு இந்த உண்மை மறைக்கலிய ராமாயணத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாமென்பதற்கு அவர் ஒரு யுக்தி காரணமும் சொல்லுகிறார். அதாவது, “சீதையின் பிறப்பைப் பற்றியோ அவளுடைய பழைய சங்கதிப்பற்றியோ வால்மீகர் எங்கும் ஒருவரி கூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுகள் உண்மையாக இருக்கலாம்” என்கின்றார்.

எனவே சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும் ராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4, 5 ஆதாரங்களும், ராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற ராமாயணங்களில் என்னென்ன பந்துத்வங்களிருக்குமென்பது யூகிக்கக்கூடவில்லை.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னமும் அதிசயமாய் இருக்கின்றது. பழய சின்னத்தைக்காப்பாற்றுவதற்கும் சாமிவண க்கத்திற்குச் செலவு செய்வதற்கும் என்ன சம்மந்தம் இருக்கின்றதென்பதுஎமக்கு ஒரு சிறிதும் விளங்கவில்லை. பழய சின்னங்கள் இப்போது அநேகம் காப்பாற்றப்பட்டு வருவதைக் காண்கின்றோம் அவர்கள் சுவாமி வணக்கத்தின்போரால் செய்யும் செலவைக் கொண்டு காப்பாற்றப்படவில்லையென்பது நாம் சொல்லவேண்டியதில்லை. சட்டசபையில் ஒருதீர்மானம் கொண்டுவந்து இன்ன இன்ன சித்திரவேலைப்பாடுஉள்ள கட்டடங்களை சாமிகளை சர்க்கார் பழய சின்னங்களைக்காப்பாற்றும் திட்டத்தில்சேர்த்துப்பொதுப்பணத்திலிருந்து மற்றவைகளைப்போல் பாதுகாத்து வரவேண்டியது என்று உத்திரவு போட்டுவிட்டால்தானகாப்பாற்றப்பட்டுப்போகும். அப்படி இருக்க கட்டடத்தைக்காப்பாற்றசாமிகும்பிடுகின்றவர்கள் எதற்காக செலவுசெய்யவேண்டும் என்றுதான் கேட்கின்றோம். பொதுவாக சென்னை நாகரிகம் பெற்ற நகரம் என்று சொல்லுவது வழக்கமாயிருந்தாலும் அது வெளி வேஷத்தில் நாகரீகம் பெற்றிருக்கின்றதே தவிர உள்ளுக்குள் பகுத்தறிவிலும் மூடநம்பிக்கைகளிலும்பட்டிக்காடுகள் என்பவைகளைவிட மோசமான புத்தியையும் மனப்பான்மையையும் உடையதென்றே சொல்லுவோம். சென்னை ஆண்களுக்கும் பெண்களுக்கும் மூடபக்தியில் மிகுதியும் நம்பிக்கையுண்டு. அதாவது ஒருபெரிய கழுத்தில் மொத்தமாக மஞ்சள் நூலைப்போட்டுகொண்டு கையில்நெருப்புச்சட்டியை ஏந்திக்கொண்டு இரண்டுமூன்று மாரியாயிபாட்டு பாடிவிட்டால் ஐகோர்ட்டுஜட்ஜ் வீட்டுப் பெண்கள் முதல்கொண்டு ஷெரீப்வீட்டுப் பெண்கள் முதல்கொண்டுசகாசபைத்தலைவர் வீட்டுப்பெண்கள்முதல்கொண்டு அக்கிழவி காலில் தண்ணீரைக்கொட்டி சாம்பிராணிபுகைபோட்டு கர்ப்பூரம் பற்றவைத்து காலில் விழுந்து வரம் கேட்பதை இன்றும் பார்க்கலாம். ஆண்களும் மேல்வேஷ்டியை இடுப்பில் வரிந்துகட்டி கிழவிமுன் கும்பிட்டு வரம்கேட்டு வேப்பிலையைக்கிள்ளி வாயில் போட்டுக்கொள்ளுவதையும் பார்க்கலாம். எனவே இவர்கள் கற்பூர பொருத்தி வைப்பதற்கு ஊர்வலத்தில் அதிசயமில்லை. ஆனாலும் இவர்கள் வார்த்தைக்காக கூட்டத்தில் இருந்தவர்களில் 100-க்கு 99 பேர் சம்மதிப்பு கொடுத்தார்கள் என்பது அக்கிருத்தவர்களுக்கு நன்றாய் விளங்கியிருக்கும். நிற்க அடுத்த தீர்மானமாகிய கலியாண விஷயத்தைப்பற்றியும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை இருக்கும்படிசெய்த அடுத்த தீர்மானத்தைப்பற்றி மறுமுறை எழுதுவோம்.

---

மலாய்நாட்டில் ஜாதிப்பட்டங்களைநீக்கி விட்ட கனவான்களின் பெயர்கள்.

சிவகெங்கை தாலூகா போடுபிம்சிவிட்டு திரு ராமச்சந்திர சேர்வை அவர்கள் தனது சேர்வை என்கின்ற பெயரை விட்டுவிட்டார். மகாநாட்டுத் தலைவர் திரு சவுந்திரபாண்டிய நாடார், நாடார் என்பதை விட்டுவிட்டார்.

## மதிப்புரை.

"முன்னேற்றம்" என்னும் பத்திரிகை திரு. வெ. சி. நாராயணசாமியவர்களை ஆசிரியராகவும் திரு. ஜி. எஸ். சாரங்கபாணியவர்களை வெளியிடுவோராகவும் கொண்டு மலாய்நாட்டில் சிங்கப்பூரிலிருந்து வெளிவருவதாகும். இப்பத்திரிகையின் ஐந்து மலர்களைப் பார்த்ததில் இதன் கொள்கைகள் முற்றிலும், மக்களைத்தொன்றுதொட்டுள்ள மூடப்பழக்க வழக்கங்களாகிற படுகுழியினின்றும் ஜாதிமதங்கள் என்கின்ற கொடிய விலங்குகளினின்றும், பார்ப்பனீயக் கொள்ளைக்காரர்களின் பெருந் துன்பங்களினின்றும் மீட்டு வாழ்விக்கும்படியானதும் ஒப்பற்ற சுயமரியாதைத் தத்துவங்களையும் கொண்டதாகவே இருக்கின்றன. இப்பத்திரிகையானது தன் பெயருக்கேற்ப மக்களின் முன்னேற்றத்திற்கானவிஷயங்களையே கொண்டு விளங்குவதால் இப்பத்திரிகையானது நம்மக்களுக்கு இன்றியமையாததோர் நற்றுணையாகும் என்பது எமதபிப்பிராயம்.

ஆனால், தற்காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்களெல்லாம் பத்திரிகை பத்திரிகை என்பதாக ஏற்படுத்திக்கொண்டு மக்களை உபதவிக்கிறார்கள் என்று சிலர் எண்ணவோ சொல்லவோ செய்யலாம். ஆனால், நாம் அதைப் புத்திசாலித்தனமானவைகளென்று மதிக்கமாட்டோம். ஏனெனில், ஒரு நாடோ ஒரு சமூகமோ முன்னேற்றமடையவேண்டுமானால் அதன் பொருட்டும் பத்திரிகைகளும் பாடசாலைகளுமாகவே மலியவேண்டும். இதை யுரோப்பிலேதான சில அறிவிற்சிறந்த பெரியார்கள் எச்சமூகத்தையேனும் எந்த நாட்டையேனும் முன்னேற்றமடைந்திருக்கிறதா? இல்லையா? எனத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவர்கள் அந்நாட்டினரையோ சமூகத்தினரையோ கண்டால், உங்களுக்கென எத்தனைபத்திரிகைகள்? எத்தனைபாடசாலைகள்? எத்தனை கலாசாலைகள் இருக்கின்றன வென்றே கேள்வி கேட்கிறார்கள். ஆகவே, பத்திரிகைகளின் எண்கள் மிகுவதைத் தாழ்வாக நினைக்கவோ சொல்லவோ சற்றும் இடமில்லை. ஏனெனில்:—

பத்திரிகைதான் முன்னேற்றமடையக் கருதும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஆசான். பத்திரிகைதான் மக்களுக்கு அறிவையூட்டி வளர்க்கும் தாயினுமினியது. பத்திரிகைதான் புத்திபுகட்டும் ஓர்தந்தை. பத்திரிகைதான் ஆபத்துக்குதவும் நற்புதல்வன். பத்திரிகைதான் உண்மைத்தோழன். அதுவே ஐம்புலன்களையு மொருமித்து இன்பம் நுகரச்செய்யும் உத்தம மனைவி. அதுவே பெருஞ்செல்வம். அதுவே நெருங்கிய சுற்றம். அதுவே இன்பந்தரு பெருவீடு. அதுவே நோயகற்றும் சஞ்சீவி. அதுவே இன்னமுது. அதுவே உண்மைச் சேவகன். அது மக்கள் வசிக்கும் ஒவ்வொரு இல்லந்தோறும் வந்து, சுயேச்சையும சுவாதீனமற்று அஞ்ஞானத்திலும் சோம்பலிலும் பசியிலும் தரித்திரத்திலும் உறங்கிக் கிடக்கும் மக்களை யெழுப்பி உய்விக்கும் நற்றுணைவன்.

வெறும் நாட்டுச் செய்திகளையே தமக்கணியாகத்தாங்கியும் ஒரு சில தொகையினரான கூட்டத்திற்கு மட்டில் நலத்தைத்தருவதாகவும், ஆசிரியர்களின் கியாதி, லாபப் பூஜைகளுக்காகவும், மக்களின் பொருள்களையும், அவர்களின் அருமையான பொழுதுகளையும் கொள்ளைகொண்டு தமது ஒருசாணை நிரப்பிப் பெருமைச் சின்னங்களை பரிமாறி காலத்தைக்கழித்துவரும் சிலபோலிப்பத்திரிகைகள் போன்றல்லாமல், ராயல் 1க்கு 16ல் 20 பக்கங்கள் கொண்டு மலர்கள்தோறும் கண்கவரும் தலைவர்களின் சித்திரப்படங்களாலும் நல்ல பதிப்புள்ள நல்ல தமிழில் பண்டித பாமர ரஞ்சனமான முறைகளில் உயர்ந்த அனுபவமும் பரோபகாரமுள்ள அறிவாளிகளால் எழுதப்பெற்ற கட்டுரைகளைக் கொண்டதோடு ஒவ்வொரு மலர்களிலும் ஒவ்வொரு பக்கங்களிலும் ஒவ்வொரு வாக்கியங்களிலும் சுயமரியாதைத் தத்துவத்தின் தேன் துளிகள் கசிந்தொழுகும் மாதிரியிலமைந்து ஒளிர்வதால் இக்காலத்துக்கேற்ற ஓர் நற்பயனென மக்கள் யாவருமிதை யாதரிப்பார்களென நம்புகிறோம்.

இதன் வருட சந்தா.

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு | 2—25 |
| இந்தியா சிலோனுக்கு | ரூ 5 |

கிடைக்குமிடம்:—

மானேஜர், "முன்னேற்றம் ஆபீஸ்"
125 சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

காலண்டர்.

மலாய்நாட்டில் சிறந்த நாமமுடைய சிங்கப்பூர் "அசோகா அச்சியந்திரசாலை" சொந்தக்காரர் அவர்களிடமிருந்து அனுப்பப்பட்ட ஆங்கில 1929-ஞூத்திய காலம் மாதம் தேதிகளடங்கியதும் அரசாங்க விடுமுறையவும் பண்டிகைகளுடையவும் விடுமுறை மாதத் தேதிகளைக் காட்டக்கூடியதும் அழகானதுமான காலெண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதற்காக மிக்க மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறோம்.

---

சுயமரியாதை சமரசச் சடங்கு.

இப்புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். சடங்குகளில் நம்பிக்கையிருந்து அவற்றை பார்ப்பனரை நீக்கி தமிழ் மொழியிலேயே செய்ய விருப்பமுள்ளவர்களுக்கு மிக உபயோகமானது. அச்சடங்குகளில் பார்ப்பனரால் சொல்லப்படும் மந்திரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பைப் பாடல்களாகப் பொரித்திருக்கின்றனர். இதன் ஆசிரியர் சிறுவர்களுக்கு முதற்படியான பலநூல்களியற்றியிருக்கிறார். இன்னும்பல எழுதிவருவதாகவும் அறிகிறோம். இந்நூல் 50 பக்கங்களுடன் நல்ல கடிதத்தில் பதிப்பித்து பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியரின்படம் முதல்தாளில் திகழுகிறது.

| | | |
|---|---|---|
| விலை விபரம்:-பிரதி | 1-க்கு | 0—3—0 |
| | 6 ,, | 1—0—0 |
| | 24 ,, | 3—4—0 |

வேண்டியவர்கள் இதன ஆசிரியர்
சி. பி. ஆர் பாரதி,
24 சௌந்தரபாண்டியன் தெரு, திருச்சி.
என்ற விலாசத்திற்கு எழுதவும்.

(6ம் பக்கத் தொடர்ச்சி.)

மோட்சத்துக்கென பார்ப்பனர்களுக்கு அரிசிகளையும் காய்களையும் மூட்டைக்கணக்கில் தூக்கி விட இஷ்டப் படுகிறீர்களா? அல்லது இவைகளுக்கு உங்களுக்கு நம்பிக்கை ஏதேனும் உண்டா? வழக்கமென்னும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் உங்கள் மாதா பிதாக்களுக்கும், சகோதரிகளுக்கும் எடுத்துக்காட்டி உண்மையை விளக்குவது உங்கள் கடனாகும். ஆகையால் நீங்கள் எல்லோரும், இக்கொடு நோய்களை நாட்டை விட்டு ஓட்டுவதற்கான பிரசாரம் செய்ய வேண்டும். ஜஸ்டிஸ், திராவிடன், குடி அரசு, ரிவோல்ட், போன்ற பத்திரிகைகளின் விர்த்திக்குவழிதேட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். வாலிபர்கள் முனைந்து முன்வரின் கைகூடாக்கர்மம் இல்லவே இல்லை. உலகம் உங்கள் உதவியையே நாடி நிற்கிறது,

பெண்கள் நிலை.

மற்ற இயக்கங்களை விட பெண்கள் இயக்கத்தையே அதிக முக்கியமாகக் கருதுகிறேன். ஒரு தேசத்தின் முன்னேற்றம், அத்தேசப் பெண்மக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. "தாயைப்போல் பிள்ளை" யென்பதற்கு ஒப்ப, தாய்மார்கள் எத்துணை குணம பொருந்தியவர்களாயிருக்கின்றார்களோ, அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் அத்துணை குணம் பொருந்தியவர்களாயிருப்பார்களென்று உலக அனுபவ முடிவு. மக்களைப் பக்கத்தில் வைத்து செப்பனிடும் பொறுப்பு தாய்மார்களைப் பொருத்திருக்கிறது. அவர்களுக்கு நல்லுபதேசம் போதித்து பள்ளி செலலும் வரை பாடம் கற்பிக்கும் முறை அவர்களுடையதே. நம் சமூகத்தின் வருங்கால நிலைமை, தற்காலக்குழந்தைகளின் நிலைமையைப் பொறுத்திருக்கிறது. அக்குழந்தைகளின் நிலைமைதற்காலத் தாய்மார்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் சார்ந்தது. ஆகவே, நமது வருங்காலநிலைமை தற்காலப் பெண்களின் நிலைமையைச் சார்ந்திருக்கிற தென்பது வெளிப்படை. இவ்வாறு ஒரு சமூகத்தை நேரடியாகக் கட்டுப்படுத்தும் பெண்மக்களை நாம் என்ன செய்தல் வேண்டும். ஆண் மக்களின் அடிமைகள்போல் நாம் அவர்களை நம அறைப்பக்கரையிலும், வீடுகளிலும், அடைத்து வைத்திருக்க நான் இஷ்டப்பட விலலை. அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கென்னும் பிற்போக்கானமுது மொழியில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆண்களைப் போன்று பெண்களுக்கும் கல்வி போதிக்க வேண்டும், சமுதாயத்திலும், அரசியலிலும்; சம அந்தஸ்து கொடுக்க வேண்டும். குடும்ப சொத்துக்களில் [illegible] சமபாகம் கொடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் கொடுக்க ஆண்கள் மறுத்தாலும் பெண்கள் வலிந்து பெறுவதற்கான [illegible] செய்தல் வேண்டும். ஆத[illegible] கடனில் முதலாவதாக நீங்கள் இ[illegible] அவர்களுக்கு உடனே [illegible] வேண்டும். குடும்ப அடி[illegible]னும் பட்டத்தை நீக்கவேண்டும். அப்பொழுது தான் நம் சமூகம் சீர்படும்.

முடிவுரை.

இன்னும் அதிகநேரம் நான் பேச விரும்பவில்லை. கடைசியாக நான் உங்களுக்குக் கூற விரும்புவது நீங்களெல்லோரும் ஒற்றுமையுடனிருந்து கல்வி கற்று, நம் சமுதாய, தேசிய புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டு நம் சமூகத்தையும் தேசத்தையும் உயர்நிலைக்குக் கொண்டு வர வேண்டுகின்றேன்: தூங்கி நிற்கும் காலமிதுவல்ல. நிமிடந்தோறும் உலகில் பிரமாண்டமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன அம்மாறுதல்களுக்கேற்ப நாமும் நம்மை மாற்றிக் கொண்டு உலகப் பந்தய முன்னணியில் நிற்கவேண்டும், நமது இயக்கத்தில் நமக்கு பூரண வெற்றி கிடைப்பதுஉங்களைப் பொருத்திருக்கிறது இந்த நல்லசந்தர்ப்பத்தை வீணாக்காமல் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுமாறு உங்களை நான் மறுமுறையும் வேண்டிக் கொள்கிறேன். கடைசியாக எனக்கு இக் கௌரவப்பதவியை அளித்த வரவேற்புக் கழக அங்கத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் மீண்டும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்

நிகழும் 1929 ௵ பிப்ரவரிமாதம் 1ந் தேதிக்குச்சரியான தமிழ் விபவ ௵ தை மாதம் 20 தேதி சுக்கிரவாரத்தன்று திரு. ம. ரெங்கசாமிநாடார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி திரு. பக்கிரிசாமிக்கும், திரு ஆ. ராமசாமி நாடார் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி அமராவதிக்கும், பிஞ்சை குருசன்லான் 32 நெம்பர் கிருகத்தில் பார்ப்பனீயம் இன்றி திரு சக்கரபாணி உபாத்தியாயரால் திருமணம் சிறப்பாய் நடத்தி வைக்கப்பட்டது.

## பார்ப்பனீயம் ஒழிந்த சுபாசுபங்கள்.

அனுப்புப்பாளையம் கிராமம் பஞ்சாயத்து மாஜி பிரசிடெண்டு திருவாளர் வ.ப. ராயப்ப செட்டியார் அவர்கள் இம்மாதம் 20-உ அனுப்புபாளையத்தில் பார்ப்பனீயச்சடங்குகளின்றி திருவாளர் க. வி. கிருஷ்ணப்ப செட்டியார் அவர்களால் மாங்கல்யம் எடுத்துக்கொடுக்கப்பெற்று திருவாளர்கள் எம். கே. முருகநாத செட்டியார், குழந்தைவேல் செட்டியார், சுயமரியாதை இயக்கத்தைச்சேர்ந்த இன்னும் பல பெரியோர்கள் ஆசீர்வதிக்க ஆத்துப்பாளையம் திரு. நஞ்சப்பசெட்டியார் திருச்செல்வி வெங்கட்டம்மாளுக்கு மாங்கல்யதாரணம் செய்து மணந்துகொண்டார். திருவாளர் எம். கே. முருகநாத செட்டியார் பார்ப்பனீயப் புரட்டைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். இக்கிராமத்திலும் இதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் இத்திருமணத்திலிருந்து சுயமரியாதை உணர்ச்சி பரவிவருகிறது. வெ. ந. மு. அ.

ஈரோடு தானிய வியாபாரம் நாகவல்லி என் சின்னுசாமி நாயுடு அவர்கள் தமது தாயார் ஸ்ரீ காவேரி யம்மாள் காலஞ்சென்றதை முன்னிட்டு சென்ற 6-2-29லும்,

ஈரோடு மண்டி அ. கோ. ராமசாமி நாயக்கர் அவர்கள் காலஞ் சென்ற தமது தந்தையாரின் ஆண்டுவிழாவை சென்ற மாதம் 2—2—29லும்,

பார்ப்பனீயச் சடங்குகளை ஒழித்துசுமார் 1000 ஏழைகளுக்கும் பந்து மித்திரர்களும் விருந்தளித்து முடித்தனர்.

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.
காப்பிப்பொடியை ஒழிக்கும்
றேப்பி பவுடர்.
உஷ்ணத்தை மாற்றும்! உலக இன்பத்தை ஊட்டும்! கற்பமூலிகைகளால் தயாரித்தது! காப்பிபோன்ற மணமுடையது! வி பி.வேறு
¼ டஜன் டின் ரூ. 1 ½ டஜன் ரூ. 1¾.
S. V. ராஜப்பா, மளிகை, பழநி.

சகோதரிகளே!
எனக்கு 39 வருடங்கள் வரையில் புத்ரபாக்கியமில்லாமல் சதா அவஸ்தைப்பட்டு வந்த ருதுக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்ர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.
சுந்தராம்பாள்.

"சௌரியா"
ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான
'சௌரியாவை'
சாப்பிட்டு ருது சூலை, சூதக வலி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதியினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சம்பன்னராய் வாழ்கின்றனர்.
விபரமான கேட்லாக் இனாம்.
புட்டி 1 க்கு ரூபாய் 3 0—0.
பாக்கிங் தபால் செலவு வேறு.
சங்கர ராம் மெடிகல் ஹால்,
சேலம்.

# மதுரை முனிசிபாலிட்டி.

## டெண்டர் நோட்டீஸ்.

மதுரை டவுனிலிருந்து குப்பை, கக்கூஸ் குப்பை முதலியவைகளை சராசரி சுமார் 6 மைலுக்குட்பட்ட தூரத்திலுள்ள குப்பை டிப்போவிற்கு மோட்டார் லாரிகளில் தினசரி அப்புறப்படுத்த டெண்டர்கள் கோரப்படுகின்றன. டெண்டர்கள் முத்திரை வைக்கப்பட்ட உரைகளில் போடப்பட்டு நாளது 1929 ம் ௵ மார்ச்சு மாதம் 20 ம் தேதியிலாவது அதற்குள்ளாகவாவது அடியிற்கையொப்பமிட்டவரிடம் கிடைப்பதுடன் ரூ 1000 டிப்பாசிட்டும் அத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் கண்ட்ராக்டை சரிவர நடத்துவதற்காக வேண்டி ஓர் எக்ரிமெண்ட் எழுதி முடித்து கொடுப்பதுடன் மேற்கொண்டு ரூ 1000 செலுத்தவேண்டும். இந்த ரூ 1000 த்துடன் முதலில் கட்டிய டிப்பாசிட் தொகையையும் சேர்த்து செக்யூரிட்டி டிப்பாசிட்டாக வைத்துக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு நாளும் அப்புறப்படுத்த வேண்டிய குப்பையானது சுமார் 10000 முதல் 12000 கன அடிக்குள்ளாகவும் சுமார் 160 டன்களுக்கு மேல் 175 டன்களுக்குள்ளாகவும் இருக்கும்.

குப்பையை முனிசிபல் தோட்டிகளால் கூட்டி குப்பைத் தொட்டிகளில் சேர்க்கப்பட்டாவது அல்லது தெருக்கள் அல்லது சந்துகளின் ஓரங்களின் ஒதுக்கப்பட்டும் இருக்கும் இந்தக்குப்பைகளை, டவுனில் ஆங்காங்கே குறிப்பிட்ட இடங்களுக்கு டெண்டர்தார் கொண்டுபோய்ச் சேர்த்து அவ்விடங்களிலிருந்து லாரிகளில் ஏற்றி, குப்பை டிப்போவிற்கு கொண்டுபோக வேண்டும். ஷை குறிப்பான இடங்களை (Collecting Centres) பொதுக் கக்கூசுகளின் பக்கத்திலும், மற்றும் கௌன்சிலால் சௌகரியமெனக் கருதப்பட்டு நிர்ணயிக்கப்படும் இடங்களிலும் ஏற்பாடு செய்யப்படும்.

தினசரி அப்புறப்படுத்த வேண்டிய கக்கூஸ் குப்பையானது, சுமார் 1800 கன அடிக்குமேல் 2000 கன அடிக்குள்ளாகவும், 45 டன்களுக்கு மேல் 50 டன்களுக்குள்ளாகவும் இருக்கும். இந்தக்குப்பையானது முனிசிபல் தோட்டிகளால் பொதுக்கக்கூசுகள் இருக்கும் இடங்களிலும் மற்றும், குறிப்பிட்ட இடங்களிலும், 2 அடி உயரமும் ஒன்றரை அடி குறுக்களவும் உள்ள மூடியிட்ட துத்தநாகத்தொட்டிகளில் சேர்த்துவைக்கப்படும், ஷை குறிப்பிட்ட இடங்களிலிருந்து இக்குப்பை டெண்டர்தாரால் டிப்போவிற்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.

குப்பையும், கக்கூசும் ஷை குறிப்பிட்ட இடங்களிலிருந்து (Collecting Centres) டிப்போவிற்கு காலை 6-மணிக்கு மேலும் மாலை-9 மணிக்குள்ளும் அப்புறப்படுத்தப்படவேண்டும்.

தெருக்களிலிருந்தும், சந்துகளிலிருந்தும், டெண்டர் தாரால் குறித்த இடங்களுக்கு (Collecting Gentres) குப்பையை அப்புறப்படுத்துவதானது, கௌன்சிலால் ஏற்படுத்தப்படும் காலவரையறைகளுக்குள்ளாகவே செய்யப்பட வேண்டும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர் தாரால் உபயோகிக்கப்படும் லாரிகள் அநேகமாகப் புதியனவாகவும், நல்லவேலைசெய்யும் நிலைமையில் இருப்பதுடனும் அவைகள் உபயோகிக்கப்படுமுன், முனிசிபல் கௌன்சில் சேர்மன் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் வேண்டும்.

குப்பைகளை எடுத்துக்கொண்டு செல்லும்பொழுது அவைகளை காற்று அடித்துக்கொண்டு போகாதபடி லாரிகளில் கான்வாஸ் துணியாலானமேல் மூடிகள் போடப்பட்டிருக்கவேண்டும்.

ஷை கண்டிராக்டானது 3 (மூன்று) வருஷங்களுக்கு ஒப்புக்கொள்ளப்படவேண்டும்.

ஒவ்வொரு டெண்டர்களிலும் கீழ்க்கண்ட விஷயங்களைத்தெளிவாய்க்குறிப்பிட வேண்டும்,

1. லாரிகளைப்பற்றிய முழு விவரங்கள் செய்யப்பட்ட கம்பெனியின் பெயர், அவைகளில் ஏற்றக்கூடிய பாரத்தின் பரிமாணம் அல்லது கன அளவு.
2. குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக எத்தனை லாரிகள் உபயோகிக்கப்படுமென்பது.
3. அவசர உபயோகத்திற்காக பிரத்தியேகமாய் எத்தனை லாரிகள் வைத்துக்கொள்ளப்படுமென்பது.
4. ஒவ்வொரு லாரிகளையும் ஒரு நாளைக்கு எத்தனை நடைகளுக்கு உபயோகப்படுத்தப்படுமென்பது.
5. தெருக்களிலிருந்தும் சந்துகளிலிருந்தும் குப்பையைக்குறித்த இடங்களுக்கு (collecting centres) எவ்வாறு கொண்டு சேர்க்கப்படுமென்பது.

ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் 1929 ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30 ம் தேதிக்குள் லாரிகளை சப்ளை செய்த உடனே வேலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

முனிசிபல் ஆபீஸ்,
மதுரை 25—2—29.

(ஒப்பம்.) ஆர். எஸ். நாயுடு,
சேர்மன்.

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

யோர் புலானுணவிற் பெரும் விருப்புடையோர் அதனால் பன்றி, மான் முதலிய காட்டு மிருகங்களை அடித்தடித்துத் தின்றனர், யாகங்களின் பேரால் ஆரியர் பல மிருகங்களைக் கொன்று தின்றனர், அத்தீச் செயலைத் தமிழ் மக்கள் கண்டித்தனர். அதனாலேயே ஆரியருக்கும் தமிழ் மக்களுக்கும் பகைமையும் போரும் விளைந்தது என்ற உண்மைகளையும் இப்போது படிப்படியாகத் தமிழ்மக்கள் உணர்ந்து வருகின்றனர். இவ்வுண்மைகளெல்லாம் வால்மீகி இராமாயணத்தினால் தெற்றென மலையிடையிட்ட விளக்குப் போல விளங்குகின்றன என்பதை நமது நேசர் தெரிந்து கொள்ள அவரை வேண்டுகின்றோம். வால்மீகி இவ்வரலாற்றைப் பெரும்பாலும் நடந்தபடியே கூறுகிறார். சிறுபான்மை இராமனுக்குத் தெய்வத்தன்மை கற்பிக்குமிடங்களைத் தவிர என்றும், கம்பர் வால்மீகி கூறிய வரலாற்றையே பெரும்பாலும் திரித்தும் மாற்றியும் புதுவது புனைந்தும் பொய் புகன்றும் தமிழ்மக்களிடைப் பொய்யான கதையைப் பரப்பித் தமிழ்மக்கள் மனத்தைக் கெடுத்து குலத்தைக் கெடுக்கும் கோடாரிக் காம்பானார் என்றுமே நாம் கூறினோம், கூறுகிறோம். வால்மீகி கூறும் வரலாற்றைக் கம்பர் உண்மையாகக் கூறியிருப்பாரேல் தமிழ் மக்கள் மிகுதியும் உண்மையுணர்தற்கு இடமுண்டு. ஆகலின் உண்மையில் கேடு புரிந்த தீமையாளர் கம்பரே. இதனால் தமிழ் மக்கள் உண்மையுணர்ந்து இராவணனைப் போற்றுமாறும் இராமனைப்பற்றி நினைக்கும் எண்ணங்களை மாற்றி வால்மீகி கூறுமாறு அவன் மிகவும் தீயவன் என்ற எண்ணத்தை மனத்திற் கொண்டு அவன் உண்மையில் திருமாலின் பிறப்பாகமாட்டான் என்ற உண்மையைப் பரப்புமாறும் செய்யவேண்டியது அறிவாளிகளின் இன்றியமையாக் கடமையாகும்.

(4) "வால்மீகியின் கதை நடையை கம்பர் மாற்றியிருப்பது சுயமரியாதையின் உதயமல்லவா?" என்கிறார் நேசர். வால்மீகியின் கதை நடையைக் கம்பர் சுயமரியாதைக்கான வழியில் மாற்றியிருந்தால் நலமேயாம் என்பதில் என்ன தடை? ஆனால் கம்பர் சுயமரியாதைக்கு கேடான வழிகளிலேயே கதையை மாற்றிப்பாடியிருக்கிறார். அம்மாற்றங்களை அவ்வப்போது பல விடங்களில் விளக்கி வந்தோமெனினும் இவண் இரண்டோரிடம் குறிப்பாம். வால்மீகியார் விவரித்தெழுதும் அசுவமேதயாக ஆபாசங்களை யெல்லாம் கம்பர் மறைத்தாரே! இவர் உண்மைத் தமிழ் மகனாயின் ஆரியர்களுடைய யாகங்களின் ஆபாசங்களை யெல்லாம் விளக்க எடுத்துக்காட்டித் தமிழ் மக்களுக்கு உண்மை விளங்கச் செய்திருப்பாரன்றோ? ஆபாசங்களை மறைத்ததில் கேடொன்றுமில்லையே, அதனால் கம்பருடைய சிறந்த அறிவு தான் எழுதப் புகுந்த நூலில் ஆபாசமான வரலாறுகளை மறைக்கத் தூண்டியது என்றால், இவர் தம் சிறந்த அறிவு ஆசிரியனுடைய வெறுக்கத் தக்க வரலாற்றை வால்மீகி குறிப்பதைக் காட்டிலும் அதிக ஆபாசமாக எழுதத் தூண்டிற்று. மேலும் இராமன் தசரதன் கோசலை முதலியோரை வால்மீகி எவ்வாறு தீயவராகக் குறிக்கிறாரோ அவ்வரலாற்றிலெல்லாம் கம்பர் அவர்களை யெல்லாம் மிக நல்லவர்களாகக் காட்டுகிறாரே. வடமொழியறியாத உண்மைத் தமிழ் மக்களுக்கு வால்மீகி, இராமன் முதலியோரைப் பேச்சளவில் நல்லவரென்று குறித்தாலும் அவர்களுடைய செயல்களை நடந்தாங்கு குறித்துள்ளார். அச்செயல்கள் இராமன் முதலியோருடைய தீய குணங்களைக் கலங்கரை விளக்கமென அறிஞருக்கு விளக்குகின்றன.

"இராம கதையில் தமிழரை இழிவுபடுத்தும் பாகத்தைக் கம்பர் ஒளிக்கிறார் என்கின்றீர்கள்" என்று நேசர் குறித்திருக்கிறார். இது உண்மையன்று கம்பர் தமிழரை இழிவுபடுத்தும் பாகத்தை விவரித்திருப்பதோடு நில்லாமல் ஆரியருடைய இழிவான தன்மைகளையே தமிழ் மக்களிடைக் காட்டாமல் மறைக்கிறார். உண்மை இதுவே. இதனால் உண்மையுணர்ந்த போது தம்மை வையும் இகழும் என அறிந்தே அவர் முதலில் "வையமென்னையிகழவும் மாசெனக் கெய்தவும்" எனக்கூறிப் பாடிச் சென்றார். கம்பருடைய தீய வஞ்சகச்சுய நலச் செய்கைகளாகிய பொய்ம்மைகளைத் தமிழுலகம் அறிந்த போது அவரை இகழாது என் செய்யும்?

5, 'ஒன்றைக்கற்பனை செய்துகொண்டு கதையை மாற்றுவதால் என்ன பயன்? அக்கதையின் சற்பாத்திரங்களை அசற்பாத்திரங்களாகக் கொள்ளும்படி செய்வது பலரின் மனதைப் புண்படுத்துவதைத் தவிர லாபமென்னவிருக்கிறது?...... சுயமரியாதையைப் பரப்பும் வேலைக்கு இடையூறாகிறதை அறிவீர்களா?' என்று நேசர் வினவுகிறார். இதனால் நேசர் திருவுள்ளம் நமது கட்டுரைகளால் புண்படுகின்றது என்று தெரிய வருகிறது. அறிஞராகிய நமது நேசர் மனதிலேயே கம்பரும் ஆரியரும் செய்த சூழ்ச்சியின் பயனாக இராமனையும் தசரதனையும் பற்றிச் சற்பாத்திரங்களென்ற எண்ணம் பதித்திருக்குமேல் அதிகமாகக்கற்றறிவில்லாத பொது மக்களின் நிலை எவ்வாறிருக்கும் என்பதை அறிஞர் சிந்தித்துத் தெளிக. நாம் வேண்டுமென்று ஒன்றையும் கற்பிக்கவில்லை. புதிதாக இராமாயணம் ஒன்றும் எழுதவில்லை. எல்லாம் வால்மீகி முனிவர் எழுதியதையே இங்கே எடுத்தெழுதுகின்றோம். வால்மீகி கூறுகிறபடி இராமன் தசரதன் சுமந்திரன் முதலியவர்களுடைய செயல்கள் தீயனவே ஆகலின் அவர்கள் தீயமதியினர் என்று தானே நாம் கூறுகின்றோம். மேலும் மொழி பெயர்ப்பாளராகிய சென்னை சீனிவாசய்யங்காருடைய குறிப்புக்களையும் அங்கங்கே எடுத்து வரைந்துள்ளோம். அவருடைய குறிப்புகளும் நமது முடிவையே தெளிவாகவும் அழுத்தமாகவும் வலியுறுத்துகின்றன. இவ்வாறாக நமது நேசர், கம்பர் புரட்டில் மயங்கியோ அன்றி வேறெக் காரணம் பற்றியோ இவ்வாறு வரைந்தது நம் சிந்தையை வருத்துகின்றது. நமது நேசரை இனியாவது ஆய்ந்தோய்ந்து சிந்தித்து உண்மையை உணர்ந்து நமது கட்டுரை சுயமரியாதையைப் பரப்புவதே என்பதைத் தெரிந்துதாமும் அவ்வாறே சுயமரியாதையைப் பரப்புவதற்கு முனைந்துழைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம். நமது கட்டுரைகளைக் காய்தல் உவத்தலின்றி நடுநிலையாகப் படித்துப்பார்க்குமாறு அவரைத் திரும்பவும் கேட்டுக்கொள்கிறோம்.

'இராமாயணத்தைப்பற்றி முற்றிலும் வெறுக்கத்தக்கவாறு தாங்கள் எழுதி வருவதால் 'குடி அரசின்' இதழ்கள்பல ராப்பர் உடைக்கப்படாமலேயே குப்பைத் தொட்டிக்குப் போவது தங்களுக்குத் தெரியாதென்றே நினைக்கின்றேன் என்று நமது நேசர் குறிக்கிறார். ஒரு பத்திரிகையைப் பார்ப்போர் அதை உடைத்துப் பாராமலேயே குப்பைத் தொட்டியிலெறிவரென்றால் அவர் தம் மதியுடைமை பாராட்டத்தகுந்ததே! அவரவர் செயலே அவரவர் குணத்தை வெளிக்காட்டுமன்றோ? ஆகலின் அவ்வாறிருப்பார் சிலரென நமது நேசர் அறிவரேல் அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி அறியாமையை நீக்கி உண்மையை விளக்கி அவர்களைக் 'குடி அரசின்' இதழ்களைக் கவனித்துப் படித்து நல்வழியிலே நடக்கும்படி செய்தருளுமாறு நமது நேசரைப்பன்முறை வேண்டுகின்றோம். எமக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பதே முக்கிய நோக்கம், யாமும் கம்ப ராமாயணத்தை மட்டும் படித்திருந்த போது எமக்கு இராமனிடம் தெய்வம்போல் பத்தியிருந்தது உண்மை. ஆனால், சில காலத்தின் பின், இராமன் ஆரியன் இராவணன் தமிழ் மகன் என்ற உண்மை தெரிய வந்தபோது இராமனுடைய தன்மைகளைக் கம்பர் கூறுமாறு முதனூலாகிய வால்மீகியார் கூறுகின்றாரா வென ஆய்ந்து பார்க்க அவா எழுந்தது அதன்படி வால்மீகி இராமாயணத்தைப்படித்து அதனால் இராமன் முதலியோர் தீயோர் என்ற உண்மையும் தமிழ் மக்களாகிய இராவணனாதியோரை வஞ்சித்துக்கொன்றவனே இராமனென்னும் உண்மையும் புலனாயின. அவைகளை எம் உடன்பிறந்தோராகிய தமிழ் மக்களனைவரும் உணர்ந்து தெளிதற்காக வெளிப்படுத்துவது எமது இன்றியமையாத கடமையெனக்கொண்டு இக் 'குடி அரசின்' மூலம் வெளிப்படுத்தலானோம். நமது சுயமரியாதை விரும்பும் நேசருக்கு எமது பேரன்பை உரிமையாக்குவதோடு அன்னோர் நமது கட்டுரைகளைக் கவனித்துப் படித்து எழும் ஐயங்களைச் சிந்தித்து தெளிவு பெறாதவைகளை எமக்கறிவிக்குமாறு வேண்டிக்கொள்வதோடு இக் 'குடி அரசை' அனைவரும் கவனித்துப் படிக்குமாறு வேண்டும் முயற்சிகளையும் செய்து உண்மை தெரியாதாருக்கு உண்மைச்சுயமரியாதையை பரவச்செய்யுமாறு மெய்யாக உழைக்குமாறு [illegible] மறுபடியும் அவரைக்கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## செய்தித்திரட்டு.

நாகபட்டணம் தாலூகா திருக்கீழ் வேளூரைச் சேர்ந்த தமிழ்பண்டிதர் திரு. சுப்பையா உபாத்தியாயரின் குமாரர்கள் சென்றபனிரெண்டுவருட காலமாக பார்ப்பனருக்கு அரிசி பருப்பு ஆடை முதலியவை கொடுத்துச்செய்துவந்த தம்தந்தையின் திதியை இவ்வருடம் நிறுத்திவிட்டு ஏழைகளுக்கும் பந்து மித்திரர்களுக்கும் அன்னமிட்டு தந்தையின் ஆண்டுவிழவைக்கொண்டாடினர்.

திண்டிவனம் தாலுக்காபோர்டு தலைவரின் மீதும் உபதலைவரின்மீதும் நம்பிக்கை யில்லையென்ற ஒரு தீர்மானத்தைப்பற்றி யோசிக்க 5-3-29 ல் போர்டின் ஸ்பெஷல் மீட்டிங் ஒன்று கூட்ட வேண்டுமென்று போர்டு அங்கத்தினர் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பர்மாதேசத்தில் மாந்தலேநகரில் பிரமஞான சபையில் 10—2—29 ல் பிராமணரல்லாதார் ஒரு மகாநாடுகூடி சென்னை பார்ப்பனரல்லாதார் கக்ஷித்தலைவர்களில் ஒருவரும் ஆதிதிராவிடர் தலைவருமான திருவாளர்கள் எம். சி. ராஜா எம். எல். ஏ. அவர்களுக்குஒரு வரவேற்பு வந்தனோபசாரப்பத்திரம் வாசித்தளித்தனர். அதுபோழ்து மாண்டலேநகர் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டும் வெஸ்லியன் பாடசாலைத்தலைமை ஆசிரியருமான க. ம. ராஜரத்தினமுதலியார் தலைமை வகித்தார். திருவாளர்கள் லாயர்தம்பி, மதுரைப்பிள்ளை, "குடி அரசு" முதலியார் என்கிற ராமசாமி முதலியார் முதலியவர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு வருணாச்சிரம ஜாதித்திமிர் பிடித்தவர்கள் செய்யும் சமூகக்கொடுமைகளைப் பற்றிப்பேசினார்கள்.

திரு. ராஜா அவர்கள் வந்தனோபசாரத்திற்கு வந்தனமளிப்பதாகவும் பர்மாவில்வசிக்கும் சென்னைவாசிகள் தங்கள் குறைகளை சங்கமூலியமாய்த் தெரிவித்தால் சைமன் கமீஷனிடம் அவைகளைத் தாம் எடுத்துச்சொல்லித் தம்மால் இயன்றதைச் செய்வதாகவும், தம்முடைய உயர்ந்த பதவிக்கு ஜஸ்டிஸ் கக்ஷியின் தோற்றமே காரணம் என்றும் அக்கக்ஷியாருக்கும் தமது நன்றியைச்செலுத்துவதாகவும் அக்கக்ஷியின் தற்கால நிலைமையையும் எடுத்துப்பேசினர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனுக்கு ஞானேந்திரியங்களின் பிரமையால் உண்டாகும் கோளாறுகள் தேகத்தில் வியாதியாய்க்காட்டும் வியாதிகளையும் தீர்ப்பதற்குச் சக்தி வருவதற்கே வைத்தியனுக்குக் கடுமையான ஒழுக்கங்கள் விதித்தார்கள். வைத்தியனுக்கு யோகம் வேண்டும் என்றும், மங்கை, பொன், பூமி அறுசுவைமுதலியவைகளில் ஆசைகூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வைத்தியன் கூலியை வைத்துக் கொண்டால் பாவம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய வியாதியஸ்தனிடம் பணம் வாங்கிக் கொண்டு வைத்தியம் செய்யென்றும் வைத்தியனுக்குச் சொல்லவில்லை. இன்னின்ன வியாதிக்கு இத்தனை இத்தனை பொன்னைக்கேள் என்று சொன்ன சில பாட்டுகளுமுண்டு. என்றாலும் நோயாளிக்கு நோய் தீர்ந்து தலைக்குத் தண்ணீர் விட்ட பின் அவர்களால் கொடுக்கப்படும் பணத்தையே வைத்தியர்கள் பெற்றுக் கொள்ளுவார்கள். "உபாத்தியாயருக்கு நரகமும் வைத்தியனுக்கு தரித்திரமும்" என்று நமது நாட்டில் சொல்லுவது வழக்கம்.

இப்பொழுது நமது நாட்டில் மேனாட்டு நாகரிகம் பரவி நம்முடைய அன்ன உடைமுதலியவைகளை மாற்றி விட்டது போலவே உயிருக்கும் சிக்கனத்திற்கும் முக்கியமான பழைய வீட்டு வைத்தியங்களை இங்கிலீஷ் வைத்தியத்தின் பிரமை அடித்துத் தள்ளுகின்றது. நம் நாட்டுப் பஞ்சு அன்னிய தேசங்களுக்குப் போய் துணிகளாக இங்கு வந்து நமது பணத்தைக் கொள்ளை கொண்டு போவது போலவே நமது நாட்டுச்சரக்குகள் மேனாட்டுக்குப் போய் மருந்துகளாகவும் ஆகாரங்களாகவும் வந்து கொள்ளை கொண்டு போகும் பணத்திற்கோ கணக்கில்லை. மேனாட்டு மருந்துகளில் பத்தில் எட்டு பாகம் நமக்கு அவசியம் இல்லை. நோயாளிகளுக்கு கொடுக்கும் கஞ்சி ஆகார வகைகள் பத்துக்குப் பத்தும் நமக்கு அவசியமில்லாதவை. இங்கிலீஷ் செண்டு என்று சொல்லப்படும் வாசனைகள் காற்றுப்பட்டவுடன் காணாமல் போவது போலவே இங்கிலீஷ் மருந்துகளில் அநேகம் நமது இரைப்பைக்குள்போனதும் நாம் பலநாளாக உட்கொண்டிருக்கும் மிளகாய் புளியால் அடிபட்டு அரிசி சோற்றின் சூட்டால் மலக்குடலுக்குத் தள்ளப்படுகிறது. எத்தனையோ பேர்கள் ஏராளமான பணத்தைப் போட்டு மாதக்கணக்காக டானிக் (பலம் தரும் மருந்து) என்பதைச் சாப்பிடுகிறார்கள். பணமும்காலமும் செலவழிந்த அளவிற்கு நன்மையடைந்தவர்களில்லை. மேனாட்டு வைத்தியம் வியாபார தோரணையை உடையதாகவிருக்கிறது. மருந்து செய்கிறவர்கள் வேறு, வைத்தியர்கள் வேறு. ஒன்றிலிருந்து ஒன்றாக புதுமாதிரியோடு அநேக மருந்துகள் செய்கிறார்கள். பணம் சம்பாதிக்கவே பல மருந்துகளைப் பலவாறு பெயர் மாற்றி வியாபாரத் தந்திரப் பிரகாரம பரப்புகிறார்கள். யாராவது ஒரு மருந்து செய்து அதற்கொரு பெயர் கொடுத்து இன்னின்ன வியாதியைப் போக்குமென்று சீட்டுமொட்டி அதற்கொரு வைத்தியன் குறிப்புமெழுதி ரசாயன சாஸ்திர சாலைகளில் தூசியில்லை விஷமில்லை என்கிற நற்சாட்சிப் பத்திரமும் பெற்று மார்க்கட்டுக்கு அது வந்து விட்டால் அதை வைத்தியர்களிடம் பரப்ப தரகர்களுமிருக்கிறார்கள். அதைப் படித்தும் கேட்டுமிருக்கும் இங்கிலீஷ் வைத்தியன் தம் பிரமைக்கும் அறியாமைக்கும் தகுந்தவாறு நமக்காக வாங்கி வைத்தியம் செய்வதில் இவர்களுக்கு மருந்து வியாபாரிகள் சிறிது தரகும் கொடுப்பார்கள். அந்த மருந்துகள் இன்னதால் செய்யப்பட்டதென்றும் அதன் குணத்தின் விசேஷமும் அநேகருக்குத் தெரியாது. ஒரு நோயாளியின் வியாதி இவர்கள் கொடுக்கும் மருந்திலோ முன் பல வைத்தியர்களிடம் சாப்பிட்ட குணத்திலோ வியாதியின் வயது முடிந்து தானாகவே போவதிலோ இயற்கை மாறுதலிலோ எதனாலோ நீங்குவதாயிருந்தாலும் அந்த வியாதிஸ்தன் சாப்பிட்ட மருந்துகள் எத்தனை? அரைகுறையாகத் தள்ளப்பட்ட புட்டிகள் எத்தனை! மிஞ்சிப்போய் மேசையில் இருப்பது எத்தனை! எடுத்துக் கொடுக்க மறந்து போனது எத்தனை! என்பதை கவனித்தால் இங்கிலீஷ் மருந்தின் வியாபாரத் தோரணையான வைத்தியம் விளங்கும். வியாபாரம் பிரதானமென்றும் சத்தியமும் ஞாயமும் கேவலம் ஒரு சிறந்த தந்திரமென்றும் நினைக்கும் இந்தக் காலத்து வியாபாரத்திற்குள் வைத்தியத்தை இழுத்துக் கொண்டதும் முப்பத்திரண்டு தருமங்களில் வைத்தியசாலையைப் பெரும் தருமமாகச் செய்ய விதித்த சாஸ்திரத்தை விட்டு விட்டுச் சத்திரம்கட்டிப் பாப்பானுக்குச் சோறு போடு என்று மகாபாவிகள் செய்த கொடுமையுமே நம் நாடு செய்த பாவமாகும். வேதசாஸ்திர புராணங்களிலும் அதைப்படித்துப் பலர் பாடின ஸ்தல புராணங்களிலும் பாப்பானுக்கே சத்திரம் கட்டி சோறு போட வேண்டுமென்றும் அவனுக்கே எல்லா தான தருமங்களும் செய்ய வேண்டுமென்றும் எழுதின போலவே வியாதி வந்தவனுக்கும் நவக்கிரக பூசை ஆயுசு ஓமம். பகவதி சேவை, கார்த்திகேயரிஷி பூசை, மார்க்கண்டேயர் ஜபம் முதலியவைகளைச் செய்து பாப்பானுக்கு சோறும் தக்ஷணையும் கொடுக்கவேண்டுமென்றெழுதி வைத்தெல்லாம பாப்பி பொருள் பறிப்பது போலவே, வியாபார விளம்பர தந்திரங்களால் வைத்தியத்தைப்பிரமைக்குத் தகுந்த வாறும் பிரமையைத் தரும்படியாகவும் எழுதி ஒட்டி காட்டையும் நகரத்தையும் கெடுத்தது போதாதென்று உழவர் யோக்கியமாக உழைக்கும் பச்சை வயற்புறங்களிலும் உதயத்தின் தெளிந்த ஒளி முதலாவது படும் மலைச்சிகரங்களிலும் ஒட்டத் தலைப்பட்டு விட்டார்கள்! அவர்களைக்கண்டு நம் சித்த வைத்தியமும் ஆயுர்வேத வைத்தியமும் அவ்வழியே ஓடத் தலைப்பட்டிருக்கிறது. (தொடரும்.)

## அருப்புக்கோட்டை சாலியர் மகாஜனசங்கம் க்ஷேமநிதிலாட்டரி

நாளது மாசிமாதம் பிரைஸ் எடுப்பதென்றிருந்தவத சீட்டுகள் சேராததினிமித்தம் சுக்கில வருஷம் வைகாசி மாதம் 24 தேதி ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை புத்தகங்கள் விற்றனுப்பியவர்களுக்கு எங்கள் நன்றியைச் செலுத்துவதுடன் தேதி மாற்றி வைத்தமைக்கு வருந்தாதிருக்க வேண்டுகிறோம் எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள். ஆர். வி. சிவசுப்ரமண்யன்.

## அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் நான்காவது மகாநாடு.

மேற்படி மகாநாடும் சென்னை மாகாண ஆதித்திராவிடர்களின் 3-வது மகாநாடும் சென்ற பிப்ரவரி மீ 24-உ யன்று சென்னையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் வங்காளம் திரு C. B மேண்டல் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## மதிப்புரை.

மாயவரம் ஆர் எஸ். கிருஷ்ணா அண் கம்பெனியாரின் 'பிருங்காமலகத்தைலமும்' 'சந்தனாதித் தைலமும்' வரப்பெற்றோம். அவைகளை உபயோகித்துப்பார்த்ததில் நல்ல வாசனையோடு கூடியதாகவும் கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தரத்தக்கதாகவும் இருக்கின்றன

## ஸ்ரீ நாராயண குருசாமிகள் தர்மபரிபாலன யோக மகாநாடு.

மேற்கண்ட யோகத்தின் அத்யக்ஷகர்களின் கூட்டமொன்று 21—2—29-ல் திரு. டி. கே மாதவன் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. அதில், ஏப்ரல் மாதக் கடைசி வாக்கில் மேற்கண்ட யோகமகாநாடும், கேரளீய ஆலயப்பிரவேச மகாநாடும், திருவாங்கூர் மாகாண சுயமரியாதை மகாநாடும் கோட்டயத்தில் முறையே திருவாளர்கள் மைசூர் டாக்டர் பல்ப்பு, பண்டித மாளவியா, ஈரோடு ஈ. வெ. ராமசாமி ஆகியவர்களின் தலைமையில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. திரு. டி. கே. குட்டன் வரவேற்பு கமிட்டி தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். மகாநாடுகள் வெகு ஆடம்பரமாக நடத்தப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஒரு நிருபர்.

## ஏலூர் பஞ்சாயத்துத் தேர்தல்.

17-2-29-ல் நடந்த தேர்தலில் ஒரு ஆதி திராவிடர் 39 ஓட்டுகளும் அவருக்குப் போட்டியாக நின்றவர் 48 வோட்டுகளும் பெற்றார்கள். அதில் ஆதித்திராவிடர் வெற்றி பெறாதபடி பார்ப்பனரும் அவர் கூலிகளும் வேண்டிய சூழ்ச்சிகள் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். அந்த போர்டில் ஒரு ஆதிதிராவிட அங்கத்தினருமில்லாதது வருந்தத்தக்கது. இதை அரசாங்கத்தாராவது நிவர்த்திப்பார்களா?

## கோயமுத்தூர் ஜில்லா மூன்றாவது கம்மவார் மகாநாடு

உடுமலைப்பேட்டையில் மார்ச்சு 2, 3 ஆம்தேதிகளில் சித்தூர் ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் திரு பி. முனுசாமி நாயுடு பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் தலைமையில்நடைபெறும். அது போழ்து கோவை ஜில்லா போர்டு தலைவரும் முனிசிபல் சேர்மனுமான திருவாளர் ராவ்பகதூர் சி எஸ் ரத்னசபாபதி எம். எல். சி. அவர்கள் விவசாயக்காட்சிச் சாலையைத் திறந்து வைப்பார்.

ஆர். வேலப்பாயுடு,
வரவேற்புக்கழகத் தலைவர்.


## சந்திராம்ருதம்.

வெள்ளை, வெட்டை, முதலிய நீர் ரோகங்களைக் குணப்படுத்துகிறது. புட்டி 1 க்கு ரூபாய் 2—0—0.

## அமிர்த சிந்தாமணி.

தேக புஷ்டி, தாதுவிர்த்தி, தேஜஸ், ரத்தவிர்த்தி செய்கிறது.
விலை புட்டி 1 க்கு ரூபாய் 5,
படை மருந்து அணா 8, பற்பொடி அணா 4.

## சுகானந்த மாத்திரை.

அஜீரணத்தை நீக்குகிறது. நல்ல பசியைக் கொடுக்கிறது, நரம்புகளுக்கும் தேகத்துக்கும் நல்ல பலம் தரும். புட்டி 1 க்கு ரூ. 1.

சுகானந்த ஔஷதாலயம்,
தபாற் பெட்டி, 222 மதராஸ்.

## பைராகி தாம்பர பஸ்பம்.

ஒரே வாரத்தில் குணம் தெரியும். பரிசைக்ஷக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

மகாமூலிகையால் உருக்கிக்கட்டிய ரசம, வங்கம், தாம்பரம், இம்மூன்றையும் தனித்தனி நீற்று பஸ்பம் செய்து வைத்திருக்கிறோம். அவரவர் வியாதியின் பெலத்திற்குத்தக்கபடி கலந்தனுப்பப்படும்.

எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே, வியாதி பெலம்போல் 12, 24, 48 நாள்களுக்கு மேல் சாப்பிடவேண்டியதில்லை யென உறுதியாய்ச் சொல்லுகிறோம். குஷ்டம், மதமதப்பு, தடிப்பு, திமிர், ரணம், குளிப்புண் குஷ்ட ரோய், வெண்குஷ்டம், பவுத்திரம், கண்டமாலை, வெங்கப்பற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று, கருமேகம், செம்மேகம் கிரந்தி, அரிப்பு, பற்று, படை முதலிய மேகம் 21 க்கும் சகலவித ரணங்களுக்கும் கை கண்ட அநுபவமுள்ளது,

48 நாள் மருந்து ரூ. 50, 24 நாள் ரூ. 25. 12 நாள் ரூ. 12—8—0.

## பிரமேக நிவாரணி.

வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, ரெத்தக்கடுப்பு, குத்து, எரிச்சல்களை ஒரே வேளையில் நிறுத்தி விடுகிறது தவறாது.

புட்டி 1 க்கு விலை ரூ. 5—0—0.

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன,
மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது ரூ. 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

நமது விலாசம்.—

S. நாராயணசாமி பிள்ளை,
போகர் வைத்தியசாலை, ஆயக்குடி. S, I.
MADURA Dt.



குறைந்த சந்தா ! நிறைந்த விஷயம் !!

## "ஆனந்தபோதினி"

### ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாதபத்திரிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ் வூழியத்தை விருத்திப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின் மேல் மாதபத்திரிகையோடு "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மத சமூக தேசிய முன்னேற்றத்தைப் பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்.

| | |
|---|---|
| மத உண்மைகளா ? | கிராமச் சீர்திருத்தங்களா ? |
| தத்துவ ஆராய்ச்சிகளா ? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா ? | வைத்திய விசேஷங்களா ? |
| வியாபார ரகசியங்களா ? | தேசிய தத்துவங்களா ? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா ? |
| | இன்னிசைப் பாட்டுகளா ? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருட சந்தா ரூ 3. 6 மாத சந்தா ரூ 1—12—0

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ 4.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.



## புல்-சத்

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு
ஜாவா

### டாக்டர்

எல்லாவித தலைவலிகளுக்கும், குளிர்ஜ்வரத்திற்கும், வாய்வு வலிகளுக்கு கைகண்டது.

புட்டி 1க்கு கிரயம் ரூ. 1—2—0.

விலாசம்:—

K. ராதா கிருஷ்ணன்,
S. 226 கிணத்தடி சந்து,
கொட்டுபாளைய தெரு, நாகபட்டணம்.



## "முன்னேற்றம்."

இது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அநீதங்களையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
152, சிலிசிரோட், சிங்கப்பூர்.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகா கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



உலகப் பிரசித்தி பெற்ற பரம்பரை வைத்தியர்! ஆயிரக்கணக்கான குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்திய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர்பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!!! சமஸ்தான வைத்திய நிபுணரான பழனி சி. மலையப்பசாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை உண்மையான குணமுள்ளவை உள்ளூர் வாசிகளால் மதிக்கப்பெற்றவை. ஒரு முறை வாங்கிபரீட்சித்தால் உண்மை விளங்கும்.

நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்.**

பச்சிலை மூலிகையினாலேயே நீர்றப்பட்டது. பெரிய மகானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும, பசியும், ரத்த விர்த்தியும், உண்டாகும். இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர் கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாக்ஷி.—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும்.

வி. பி. வரதராஜப்பெருமான் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

## குரு அப்ரேக் செந்தூரம் நீரழிவுக்கு,

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தவறாது. 24 நாள் புட்டி 1 க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1 க்கு ரூ. 30. ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்தியாசிரியர்
C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி. S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்சி, 43 அரமனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

சுக்ல வருஷத்திய
நேத்திர ஜீவ நக்ஷத்திராதி
சாந்திர சௌரமான சர்வ முகூர்த்த

## ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1க்கு அ. 2. 6-க்கு அ. 8. 12-க்கு அ. 14. எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி ஆபீஸ்" மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

**மன்மத ஸ்தம்பன குளிகை.**

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற
விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 காதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, சேடலாக் இலும். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. சு. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெட்டர்சனி தோட்டம், சேலம்.

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம்; மஸ்லின் துணியிலும் பல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 4—15—0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

தி கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால் பெட்டி. 119, மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.